# தெய்வப் பாவை

சொக்கன்

வரதர் வெளியீடு

# தெய்வப் பாவை

(நாடகம்)

எழுதியவர்

'சொக்கன்'

வரதர் வெளியீடு

முதற்பதிப்பு: ஜனவரி 1968

ரூபா 8-50

வரதர் வெளியீடு
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

---

## இந்நாடகம் எழுத உதவிய நூல்கள்

1. இந்திய தத்துவ ஞானம் — கி. லக்ஷ்மணன்
2. திருக்குறள்
3. திருத்தொண்டர் பெரியபுராணம் — சேக்கிழார் பெருமான்
4. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்
5. 1—6 திருமுறைகள் (சம்பந்தர் அப்பர் தேவாரங்கள்)
6. நாலடியார்
7. A Source Book in Indian Philosophy — By Radhakrishnan & Moore
8. History of Philosophy - Eastern & Western — Sponsored by the Ministry of Education, Govt. of India
9. Outlines of Indian Philosophy —M. Hiryanna M. A.
10. A Critical Survey of Indian Philosophy —By Dr. Chandradhar Sharma.

1, 7, 8, 9, 10 நூல்கள் சமண மத தத்துவ விளக்கத்திற்கு உதவின.

உ



மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள் பிரான் சண்பையர்கோன் அருளினாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழலெம்மாற் போற்ற லாமே

சிவமயம்

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் பொதுச் செயலாளரும்,
தமிழறிஞரும், சைவப் பெரியாருமாகிய

## பண்டித வித்துவான் க. கி. நடராஜன்

B. O. L., DIP. IN ED.

அவர்கள் வழங்கிய

## அணிந்துரை.

திருத்தொண்டர் புராணம் கூறும் சைவப் பெண்மணிகள் பலராவர். அவர்களுள் மும்மணிகள் போன்று விளங்குபவர் காரைக்காலம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார் என்னும் மூவருமாவர். அவர்களுள் காரைக்காலம்மையார் பத்தித்திறமும் பாவின் திறமும் தனிப்பட்ட சிறப்போடு திகழ்வன. மற்றையிருவருள்ளும் திலகவதியார் சமணவலையிலகப்பட்ட மருணீக்கியாரை இறைவனை வேண்டிச் சைவத்துக்கு மீளச் செய்து நாவுக்கரையராக்கிய பெருமையையுடையவர். அவர்தம் உறுதித் திறத்தால் நாம் அப்பரைப் பெற்றோம், அவர் தந்த அருமைத் திருமுறைகளைப் பெற்றோம். இரண்டாம் சமய குரவரைப் பெற்றோம். இனி, மங்கையர்க்கரசியாரோ, "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்னும் திருக்குறளுக் கிலக்காகிச் சமணவலையினின்று தம் கணவனையும் நாட்டையும் மீட்டுக் காத்து ஆளுடைய பிள்ளையின் அருட்டுணை கொண்டு சைவவொளி பரப்புதற்குக் காரணராயிருந்த பாண்டிமாதேவியாவர்.

இவர் ஆளுடைய பிள்ளையாராலேயே தமது தெய்வத் தீந்தமிழ்த் தேவாரத் திருப்பதிகத்திலே, "மானினேர்விழி மாதராய்" என்றும், "வழுதிக்கு மாபெருந் தேவி" என்றும் விளிக்கப்பெற்ற பெருமையும், "மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மட மானி பங்கயச் செல்வி பாண்டிமா தேவி" என்று பாராட்டப் பெற்ற பெருமையும் உடையவர். சேக்கிழார் பெருமான் இதனை அடியொற்றிச் செல்பவர் போன்று

"மங்கையர்க்குத் தனியரசி, எங்கள் தெய்வம்,
வளவர் திருக் குலக்கொழுந்து, வளைக்கை மானி,
செங்கமலத் திருமடந்தை, கன்னிநாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை,
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளினாலே
இருந்தமிழ்நா டுற்றவிடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மாற் போற்ற லாமே";

என வளம் நிறைந்த சொற்களால் மனம் நெகிழ்ந்த அன்போடு வழுத்துகின்றார். இதில், சைவ உலகுக்கும் சிவ நெறிக்கும் காவல் பூண்டு வளர்த்த பெருமை மங்கையர்க்கரசியாரது ஆதலாலே "எங்கள் தெய்வம்" என்று குறிப்பிடுவாராயினர். வளவர் குடி சைவத் துறையின் வழி வந்த குடி. "சென்னி வளர் மதியணிந்த சிலம்பணி சேவடியார்தம் மன்னிய சைவத்துறையின் வழிவந்த குடிவளவர்" எனச் சேக்கிழார் திருஞானசம்பந்தர் புராணத்திற் குறிப்பிட்டமையும் காண்க. இத்தகைய குடியின் கொழுந்து போல்பவர் மங்கையர்க்கரசியார் என்பாராய் "வளவர்திருக் குலக் கொழுந்து" என்று குறிப்பாராயினர். மங்கையர்க்கரசி என்று கூறுதலோடு அமையாது அரசியர் பலரும் இருத்தல்கூடுமாதலால் இவர் ஒப்பற்ற அரசி என்பாராய் "மங்கையர்க்குத் தனி அரசி" என்று குறிப்பிடுவாராயினர். பெருமையையுடையவர் என்பார் "வரிவளைக்கை மானி" என்றார். அழகில் இலக்குமியை நிகர்ப்பவர் ஆதலின், "செங்கமலத் திரு மடந்தை" என்றார். செங்கமலத் திருமடந்தை ஆயிரம் இதழ்க் கமலத்தில் வீற்றிருக்கும் ஞானம்பிகை என்பாரும் உளர். ஒரு குலத்துள் ஒருவரது பழி அக்குலம் முழுதும் பற்றுமாதலால், அத்தகைய பழி பாண்டியர்க்கு ஆகாமற் காத்த கற்பரசியாதலாலே, "தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை" என்று போற்றினர். இவ்வாறெல்லாம் வளம் நிறைந்த சொற்களால் போற்றப்பட்ட பெருமை வேறு எந்தப் பெண்மணிக்கும் இல்லை எனலாம்.

அவ்வளவோடு அமையாமல், ஆளுடைய பிள்ளையாரது அருள்கொண்டு தமிழ்நாட்டுக்கு நேர்ந்த இடரை நீக்கிச் சோழர் மரபுக்கே யுரியதாகிய தங்கள் திருவெண்ணீற்றின் ஒளியைப் பரப்பியமையையுங் குறிப்பிட்டு, இத்தகைய மங்கையர்க்கரசியாரைப் போற்றுகின்றவர்களுடைய திருவடி, எம்மாற் போற்றத் தக்கதாகும் என்று அவர் கூறி முடிக்கும்போது, "ஆமாம் அஃது உண்மையே" என்று கூற எம் நாத் துடிக்கின்றது. மானியார் பெருமை அத்தகையது.

தாம்புகுந்த மரபுக்கு வரும் பழியைத் தீர்ப்பது கற்புடைய மகளிர் கடன். தம்முடைய குலத்தைக் காத்தது போலவே நாட்டுக்கு வரும் இடரையும் நீக்கி வைத்தவர் இவர். ஆளுடைய பிள்ளையாகிய ஞானசாரியாரை அழைத்து நலம்பெறச் செய்தவர் இவர். "அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்" என்றார் வள்ளுவரும். தம்நாயகருக்கு உடற்றுணையாவது மட்டுமன்றி உயிர்க்குறுதி பயக்கும் வழித்துணையுமானார் இவர். இத்தகைய நங்கையர் திலகத்தை நாயகியாகப்பெற்றமை பாண்டியன் செய்த பண்டைப் பெருந்தவமாகும். இத்தகைய ஒரு தெய்வத்தைப் பெற்றமை பாண்டி நாடும் தமிழ்நாடும் சைவ உலகமும் செய்துவைத்த தனிப்பெருந் தவமாகும். இவ்வம்மையாரை நினைக்கவே சைவம் வீறிட்டொளிரும். இவரைப் பரவுதல், இவர்தம் வரலாற்றை எவரும் அறியக்கூடிய வகையிற் பரப்புதல் ஆகிய இவை சைவமக்கள் மேற்கொள்ளவேண்டிய ஒழுகலாறாகும். சேக்கிழார் தந்த பெரியபுராணத்தைப் படித்தோர் மட்டுமன்றி அந்நூலைப் படியாதோரும் எளிதில் அறியக்கூடிய முறையில் தருவது அவ்வொழுகலாற்றின் பாற்படும். இதைக் கருத்துட்கொண்டு என் மெகழுதகை நண்பரும் அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத் துணைச் செயலாளருமாகிய திரு. க. சொக்கலிங்கம் அவர்கள் எவரும் விரும்பத்தக்க நாடகமாக அவ்வம்மையார் வரலாற்றை யாத்துள்ளார். அவர்தம்

செயல் பொதுவாகத் தமிழ் மக்களாலும் சிறப்பாகச் சைவ மக்களாலும் பாராட்டப்படவேண்டியதொன்றும்: இப்பணியைச் செய்தற்கு அவர் எல்லாவிதத்திலுந் தகுதியுடையவர். முன்னருஞ் சில நூல்களை எழுதித் தமிழ்ப் பணி புரிந்துள்ளார்; எளிய இனிய நடையில் இந்நூல் எழுதப்பெற்றுள்ளது. வரலாற்றிலே காணப்படாத சில பாத்திரங்களும், நாடகத்துக்குச் சுவை பிறப்பிக்கும் நோக்கத்தோடு, அவராற் படைத்து மொழியப்பெற்றுள்ளன. அவை படைத்து மொழியப்பெற்றுள்ள பாத்திரங்கள் என்பதைப் படிப்போர் எளிதின் உணர்ந்துகொள்வர். நடித்தற்குப் பொருத்தமான முறையிலும் இவ்வரலாற்று நாடகம் யாக்கப்பெற்றுள்ளது. இதனுள் மூன்றுவது காட்சியில் வரும் உரையாடல், சமணத்தின் குறையும் சைவத்தின் நிறையும் காட்டுதற்கு உதவிநிற்கின்றது. நகைச்சுவையும் கலந்திருக்கின்றது. படிப்போரதும் நடிக்கும்போது நாடகத்தைப் பார்ப்போரதும் உள்ளங்களை ஈர்த்து நிற்கக்கூடிய முறையில் பக்தியுணர்ச்சியோடு கலந்து இந்நூல் அமைந்திருக்கின்றமை குறிப்பிடத் தக்கது. இதற்குத் தெய்வப் பாவையென்னும் பெயர் சாலவும் பொருத்தமுடையதே.

மேலும் இத்தகைய நல்லநூல்களை யாத்துத் தமிழுக்கும் சைவத்துக்கும் பணிபுரிய நண்பர் சொக்கன் அவர்களுக்கு நீண்ட ஆயுளையும் நிறைந்த உடல் நலத்தையும் ஏனைய எல்லா நலன்களையும் அருளுமாறு எல்லாம்வல்ல இறைவனை மனமொழி மெய்களால் இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்,
க. கி. நடராஜன்

"யோக பவனம்"
பொன்னப்பா ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.

## நாடக பாத்திரங்கள்

1 **திருஞானசம்பந்தர்:** சைவமும், தமிழுங் காத்த தண்ணளியாளர்; சமய குரவருள் ஒருவர்.

2 **மானி:** மாறனின் பட்டத்தரசியார். அவநெறி சென்ற மன்னனையும் பாண்டிய நாட்டையும் தவநெறிக்குத் திருப்பியவர். இவரைச் சம்பந்தப்பிள்ளையார் மங்கையர்க்கரசி எனத் தமது பதிகத்திலே புகழ்ந்துள்ளார்;

3. **குலச்சிறையார்:** பாண்டிய நாட்டு முதலமைச்சர்; வீரமும் சைவப்பற்றும் மிகப் பெற்றவர்: பாண்டிய நாட்டைச் சைவநெறிக்கு மீட்க மங்கையர்க்கரசிக்கு உறுதுணை புரிந்தவர்;

4. **மாறன்:** கூன்பாண்டியன் எனவும் அழைக்கப்படுவன்; பழவினைப் பயனால் சமணனாகிப் பிள்ளையாரால் வெப்பு நோய் அடைந்து, பின்பு அவராலேயே அது நீங்கி 'நின்ற சீர் நெடுமாறநாயனர் ஆனவன்;

5, **திருநாவுக்கரசர்:** சமய குரவருள் ஒருவர். சம்பந்தப் பெருமானுக்கு நண்பர்;

6. **ஹேமச்சந்திரர்:** சமணரின் பிரதம குரு, சகல கலைகளும் கற்ற பேரறிஞர். மாறனின் மனத்தைச் சமணத்தின்பால் ஈர்த்து அவனைத் தம் கைப் பாவையாக ஆட்டிப்படைத்தவர்.

7. **மல்லிசேனர்:** ஹேமச்சந்திரருக்கு அடுத்த பிரதம குரு. ஆயின் ஹேமச்சந்திரரளவு அறிவோ, ஆற்றலோ இவர்க்கு இல்லை. நாவடக்கம் இல்லாதவர்; மகாகர்வி; எதற்கும் உணர்ச்சிவசப்பட்டு வெகுண்டெழுந் தன்மையர்.

8. ஹரிபத்திரன்
9. பார்சுவநாதன்
10. நாரதன்
11. சித்தசேனன்

} ஹேமச் சந்திரரின் சீடர்கள் சமண துறவிகள்

13: தேன்மொழி
12, அல்லி
14: கயற் கண்ணி

} மானியின் தோழிமார். இசை, நடனம் போன்ற கலைகளில் வல்லவர்கள்.

15. மதிவாணர்: பாண்டிய அமைச்சருள் ஒருவர்.

16. மேதாவியார்: பாண்டிய அவைக்களப் புலவர்

17. திருநீலகண்ட யாழ்ப்பாணர்: நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவர்: சம்பந்தப்பிள்ளையாரின் பதிகங்களுக்கு யாழ் வாசித்தலே சிவ தொண்டாகக் கருதி அவரோடு அவரின் நிழலாகத் திரிந்தவர்.

18. மெய்ப்பொருளார்: சிவனடியார்.
மற்றும் சமண குருமார்கள், சிவனடியார்கள், நாட்டு மக்கள் முதலியோர்.

# தெய்வப் பாவை

## முன்னுரை

பாண்டி நாட்டிலே பரசமய வெள்ளம் கங்குகரை யின்றிப் பாய்ந்து சென்று, தமிழ் மரபுகளையும், சைவ நெறியையும் அழிக்கத் தொடங்கிய காலத்திலே, சீர் காழிப் பதியிலே ஓர் இளஞாயிறு எழுந்து, அவ்வெள்ளத் தினை வரட்டி மீண்டும் சைவப் பயிர் தழைத்திட வழிவகுத் தது. நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம் பந்தப் பெருமான் பழம் பெரும் பதியாகிய பாண்டிநாட்டு மண்ணிலே,

'பறிமயிர்த் தலையும் பாயும் பீலியும் தடுக்கு மேனிச்
செறியுமுக் குடையு மாகித்'

திரிந்திட்ட சமணர்களின் வாய் அடக்கி, வலியடக்கித் தமிழ் மக்களுக்கு வாழும் நெறியினைத் தந்தருளினர்.

இறைவனின் திருவருளை முன்வைத்து மேற்கொடண் இப்பெரு முயற்சியிலே அவருக்குப் பக்கத் துணைவராய்ப் பாண்டிமா தேவியாராகிய மங்கையர்க்கரசியாரும், மந் திரியாம் குலச்சிறையாரும் அமைந்தனர். சமணரின் புன் னெறியிலே அகப்பட்டு வருந்திய மாறனை வழிப்படுத்திய தோடு மீண்டும் சைவம் தழைத்தெழ உதவிய மாதுசிரோ மணியை, 'மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்' என்று சேக்கிழார் பெருமான் வாயார வாழ்த்துகின்ருர் தாய்மையின் அருளும், பெண்மையின் உறுதியும், ஞானத் தின் தெளிவும் ஒருசேர அமைந்த இந்நங்கை, நாயன்மார் அறுபத்து மூவருள் ஒருவராய் உயர்ந்ததில் வியப்பில்லை. அவர்தம் வரலாறே தெய்வப்பாவை எனும் நாடகமாக விரி கின்றது.

## காட்சி ஒன்று

[மனத்தைக் கனிவிக்கும் நாதசுர இசை பின்னணியில் எழ முன்னுரை பேசப்படுகின்றது. திரை விலகும் பொழுது கோபுரம் (மதுரை) மங்கிய நிழலுருவாய்த் தோற்ற ஆலய மணியோசை கம்பீரமாய் எழுகின்றது. மணியோசை மெல்ல அடங்க, கோயிற் கோபுரம் மறைந்து கர்ப்பக் கிருகம் தோற்றுகின்றது. அங்குத் தீபங்களின் ஒளிவெள்ளத்தில் உமையொரு பாகத் தொருவனின் திருவுருத் தோற்றுகின்றது. அருச்சகர் பஞ்சாராத்தி காட்டுகின்றார். மானி என்ற நாமம் பூண்ட பாண்டிமாதேவி பத்திபரவசளாகிக் கண்ணீர் வார, மெய்ம்மயிர் பொடிப்ப உச்சிமேற் கூப்பிய கரத்தோடு நிற்கின்றாள். அவள் பக்கலிலே தோழியர் சிலரும் நின்று இறைவனை வணங்குகின்றனர். மறுபக்கலிலே சிவனடியார் கூட்டம்; அருச்சகர் பஞ்சாராத்தி காட்டி முடிந்ததும் ஓதுவார் ஒருவர் அப்பர் சுவாமிகளின் திரு ஆலவாய்த் திருப்பதிகத்தை உருக்கத்தோடு இசைக்க அருச்சகர் உட்பட யாவரும் மெய்ம்மறந்து கூப்பிய கரத்தராய் நிற்கின்றனர்]

திருவாலவாய்த் திருநேரிசை (திருச்சிற்றம்பலம்)

**ஓதுவார்:-** வேதியா வேத கீதா விண்ணவர் அண்ணா
என்றென்(று)
ஓதியே மலர்கள் தூவி ஒருங்கிநின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை
[மதியஞ் சூடும்
ஆதியே ஆல வாயில் அப்பனே அருள்செய் வாயே.

நம்பனே நான்முகத் தாய் நாதனே ஞான மூர்த்தி
என்பொனே ஈசா என்றென் றேத்திநான்
[ஏசற் றென்றும்
பின்பினே திரிந்து நாயேன் பேர்த்தினிப்
[பிறவா வண்ணம்
அன்பனே ஆலவாயில் அப்பனே அருள்செய் வாயே.

ஓது! (திருச்சிற்றம்பலம்) நமப்பார்வதி பதே!

கூடிநின்: (மானி உட்பட) அரஹர மகாதேவ!

ஓது: நமப்பார்வதி பதே!

கூடிநின்: அரஹரமகாதேவ!

ஓது: நமப்பார்வதி பதே!

கூடிநின்: அரஹரமகாதேவ!

[அருச்சகர் விபூதி, பிரசாதம் வழங்குகின்றார்; மானி முதலியோர் பயபத்தியோடு பெற்று அணிகின்றனர்: சிறிது சிறிதாகக் கூட்டம் கலைகின்றது; இப்பொழுது சந் நிதி முன்னால் மானியும் தோழியருமே நிற்கின்றனர், தீப மங்கல ஜோதியின் நடுவே சோமசுந்தரரும், மீனாட்சியம் மையும் ஒளிவிடும் காட்சியிலே சிறிதுபோது தன்னை இழந்த மானியின் விழிகளிலே நீர் ததும்புகின்றது]

மானி: (விழிகளை மூடிக் கரங் கூப்பிநின்று) ஈசனே! ஆல வாய் அப்பனே! என்னை ஆளுடைய எம்பெருமானே! உன் இணையடிகளை என் இதயத்துச் சூடி நிற்கின் றேன். என் நாதர் ஆனைமாமலைப் பகுதியிலே ஏற் பட்ட குழப்பத்தினை அடக்கச் சென்றவர், இன்னும் மீண்டிலர். அவர் நோயின்றிப் பெயர்தல் வேண்டும்; என் உள்ளத்தே சொல்ல முடியாத ஒரு வேதனை ஏற் பட்டுக் கணந்தோறும் வளர்ந்தவண்ணம் இருக்கின் றது. அதற்குக் காரணம் என்ன என்றும் புலப்பட வில்லை; எனது துன்பந் துடைத்திடு; கருணைக்கண் மலர் திறந்து என்னை ஆண்டுகொள்.

[குலச்சிறையார் வருகின்றார். அமைச்சருக்குரிய ஆடை அணிகளோடு விளங்கினும், நீறுபொலியும் நெற் றியும், உருத்திராக்கம் விளங்கும் மார்புமாகச் சைவத் திருவோடு காட்சி தருகின்றார்.]

குலச்: (சந்நிதியின் முன்பு நின்று கண்மூடிச் சிறிது தியானித்துவிட்டு) தேவி! நீங்கள் இங்கேயா இருக்கின்றீர்கள்?

மானி: (மனமும் முகமும் மலர) அமைச்சரே! எப்போது ஆனைமாமலையிலிருந்து திரும்பினீர்கள்? அரசர் எங்கே? நீங்கள் நாடு திரும்புவதுபற்றி ஒரு செய்திகூட அறிவிக்காதிருந்துவிட்டீர்களே?

குலச்: (முகங் கருகி) அது பெரிய கதை தேவி!

மானி: (மனக் கலக்கத்தோடு) ஏன்? ...என்ன? நீங்கள் சொல்வதென்ன? குழப்பம் மிகப் பெரியதாக இருந்ததா? உங்களால் அடக்க முடியாது போய்விட்டதா? அரசர்க்கு....

குலச்: அப்படி ஒன்றும் இல்லை, தேவி! அரசர் பத்திரமாகத் திரும்பிவிட்டார். ஆனால்......

மானி; ஆனால்......என்ன? குலச்சிறையாரே! என்னைக் குழப்பாதீர். நடந்ததைச் சொல்லும். அரசர் இப்பொழுது எங்கே இருக்கிறார்?

குலச்! அரசர் நேராக அந்தப்புரம் சென்றுவிட்டார். தங்களைத் தேடிக்கொண்டுதான்.

மானி: வியப்பாக இருக்கிறதே! துஞ்சலும், துஞ்சலிலாத போதும் 'சொக்கேசா, சோமசுந்தரா' என்றே சொல்லிப் பழகியவர், எச்செயலையும் ஆலவாயின் அவிர் சடைக் கடவுளை முன்வைத்தே நிகழ்த்துபவர், நாடு திரும்பியதும் முதலில் இங்கல்லவா வந்திருப்பார்? வந்திருக்கவேண்டும்?

குலச்: (குரல் தளதளக்க) ஆனைமா மலையிலே குழப்பம் என்று அடக்கச் சென்றோமல்லவா?

மானி: ஆமாம் குழப்பத்தை அடக்கித்தானே திரும்பினீர்கள்?

குலச்: (பெருமூச்சுடன்) குழப்பத்தை அடக்கவில்லை, குழப்பத்தில் அடங்கிவிட்டோம் தேவி! ஆனைமாமலை அரசர் வென்ற திருநெல்வேலியாய் இருந்திருப்பின்

கதையே வேறு. ஆனால் இங்கு வாளுக்கோ, சூத்தீட்டிக்கோ வேலை இருக்கவில்லை. ஆனைமா மலையிலே நடந்த குழப்பம் அறிவுக் குழப்பம்! சிந்தனைக் குழப்பம்! பரம்பரை பரம்பரையாக நாம் பேணிவந்த எமது தெய்வச் செந்நெறிக்கும், முளைத்தெழுமோர் புன்னெறிக்குமிடையே விளைந்த பெரும் பூசல்.

மானி: அமைச்சரே! சொல்வதை விளக்கமாய்ச் சொல்லும்; எனது மனக் கலக்கம் அதிகரிக்கின்றது.

குலச்: ஆனைமாமலையையும் அதனை அடுத்த ஏழு மலைகளையும் வாழிடமாய்க் கொண்டு சமணர்கள் தங்கியிருக்கின்றனரல்லவா?

மானி: ஆமாம்.

குலச்: அவர்களின் சமயப் பிரசாரத்திலே, எமது பத்திப் பெருநெறியைப் பரிகசிக்கும் பல அம்சங்கள் அடங்கியுள்ளன. சிந்தனையிலே குழம்பிப் போனவர்கள், நிலையற்ற மனம் படைத்தோர், ஆழமான சமய அறிவற்றவர் இந்தப் பரிகாசத்திற்கு எளிதில் அடிபணிந்துபோய் விடுகிறார்கள். அதனால் ஆனைமாமலைப் பகுதியிலே பலர் சமணராய் மாறி வருகின்றனர்,

மானி: (நடுநடுங்கிப் போய்) அமைச்சரே! இதுதானா அங்கு நடக்கும் குழப்பம்? 'குண்டராய்த் தலைபறித்துக் குவிமுலையார் நகை நாணாது' உழல்கின்ற பித்தர்தம் வழியையா நம் மக்கள் பின்பற்றுகின்றனர்? வெட்கம் தரும் செய்தி! எமது நாடும் ஒரு தொண்டைமண்டலமாய் மாறுவதோ? சிவசிவ!

குலச்: அங்கு வாழ்கின்ற சமணர்கள் அறிவாளிகள்; வடமொழியுந் தென்றமிழும் முறையாய்க் கற்றவர்கள்.

மானி: 'கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.'

அன்பில்லா அறிவு, அருளில்லா உணர்வு இவற்றாலாம் பயன் என்ன? இறைவனே உளனே இலனே என்று ஐயமுறும் நீசர்களல்லரா சமணர்கள்?

குலச்: (வருத்தத்தோடு) தேவி! நினைக்கவே நெஞ்சு நடுங்குகின்றது; சொல்லவே நாக் கூசுகின்றது. இந்த நீசர் கூட்டத்தின் வாய் வன்மைக்கு அடிபணிந்துவிட்டார் எம் அரசர்.

மானி: (தலையைப் பிடித்த வண்ணம் தடுமாறி நடுங்கித் தளர்ந்து) என்ன சொன்னீர்கள்? மன்னர் சமணர்க்கு வசமாகிவிட்டாரா? இறைவா! எம்பெருமானே; சொக்கநாதா! (வாய் பேசவும் இயலாது விம்மியபடி பக்கத்தில் நின்ற தோழிப் பெண்ணிலே சாய, அவள் மானியைத் தாங்கிக்கொள்கின்றாள்)

(பேச்சற்ற பெருமௌனம்)

குலச்: (சில கணங்கள் பொறுத்து) இன்னும் ஒன்றும் நடந்துவிடவில்லை. சமண குருமாரின் போதனைகளிலே அகப்பட்டுத் தடுமாறும் உளத்தரராய் அரசர் திரும்பியது உண்மைதான். ஆனால் அவர் சமணராகிவிடவில்லை. இன்னும் நம்பிக்கை இருக்கிறது.

[மானி ஒன்றும் பேசாது நடைப்பிணம்போலத் தோழியரால் தாங்கப்பட்டுச் செல்கிறாள்]

குலச்: சொக்கேசா! இந்த நாட்டையும், மன்னனையும் நீதான் காக்கவேண்டும்.

(கண்களிலே துளித்த கண்ணீரைத் துடைக்கின்றார்)

(திரை)

## காட்சி இரண்டு

[அந்தப்புரத்தின் ஒருசார் உள்ள தனியறை; மானி சிந்தனை வசப்பட்டவளாய் ஓர் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறாள். வீணை, மத்தளம் முதலான இசைக் கருவிகளோடு தோழியரான அல்லி, கயற்கண்ணி, தேன்மொழி என்போர் ஒரு கம்பளத்தில் அமர்ந்திருக்கின்றனர். கயற்கண்ணி சிவபெருமான்போல வேடம் புனைந்திருக்கிறாள்.]

**கயற்:** வேந்தர் அவைக்களத்திலிருந்து திரும்பும் நேரம் வந்துவிட்டது தேவி!

**மானி:** (சிந்தனையோடு) வரட்டும்... கயற்கண்ணி! தேன்மொழி! அல்லி!

**மூவரும்:** தேவி!

**மானி:** அரசர் பெருமானின் மனமாற்றம் பற்றியோ, மதமாற்றம்பற்றியோ சிறிதும் தெரிந்ததாக நீங்கள் காட்டல்கூடாது. வழக்கம்போல அவரை இன்முகத்தோடு வரவேற்போம்; தேன்மொழி! காரைக்காலம்மையாரின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் உனக்கு ஆயத்தந்தானே?

**தேன்:** நான் ஆயத்தம் அம்மா! நட்ட பாடைப்பண்ணிலே நயமாகப் பாடுவேன்; கேட்கின்றீர்களா?

**மானி:** (சிறிது முறுவலித்து) வேண்டாம், அரசர் வரும் வரை உனது தேனிசை அடங்கியே இருக்கட்டும்... கயல்!

**கயற்:** (பயபத்தியோடு எழுந்துவந்து) தேவி!

மானி: இன்று உன் நடனம் மிகச் சிறப்பாக இருத்தல் வேண்டும். சிவனுர் ஆடிய ஊழிக்கூத்தின் உணர்ச்சி அனைத்தும் உன் உடலெங்கும் பெருகி ஓடவேண்டும். நீ ஆடும்போது ஏற்படும் அச்சமும், பத்தியுணர்வுமே துணையாக அரசரின் மனம் திரும்பவேண்டும். விளங்குகிறதா?

கயற்: விளங்குகிறது தேவி! எனது உள்ளமும், உயிரும் உடலும் கலாதேவனுகிய நடராசன் பாலதாக, நான் என்னையே இழந்துநின்று ஆடுகின்றேன்.

மானி: நன்று.

[செருப்பொலி கேட்கின்றது.]

மானி: அரசர் வருகின்ருர். [மரியாதையோடு எழுந்து நிற்கின்ருள்]

[மாறன் வருகின்ருன். நீண்ட நெடிய உருவம். ஆனுல் சிறிதே கூன் விழுந்திருக்கிறது. அதனுல் அவனது கம்பீரமோ, அழகோ குறைந்துவிடவில்லை. அவனது நடையிலே ஒரு நிதானம் தென்பட்டாலும், முகத்திலே அதனைக் காணல் கூடவில்லை. பெரும் மனப்போராட்டத்தில் ஈடுபட்டவன் போலத் தோற்றுகிருன். அவன் உள் நுழைந்ததும் மானி அவன் காலடியிலே சென்றமர்ந்து அவன் பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொள்கிருள். மாறன் அவளைத் தொட்டுத் தூக்கிவிடுகிருன். எனினும் அந்தத் தொடுகையில் ஆர்வமோ, கிளர்ச்சியோ அன்போ காணப்படவில்லை. பதிலாகப் பலவந்தமாய் வருவித்த ஒரு வெறுப்புணர்ச்சி அவன் முகத்தில் குதி போடுகின்றது.]

மாற: மானி! எனக்காக நெடுநேரம் காத்திருந்தாயோ?

மானி: தங்களைக் காணுதிருக்கும் சிறிய பொழுதுகூட எனக்கு யுகங்களாகத் தோற்றுவது தாங்கள் அறியாததா, வேந்தே!

மாற: (முகத்தில் அன்பு மலர முயல, வைராக்கியம் என்ற வெம்மை தோற்றி அதனை அழித்துவிடுகின்றது.

அவன் பெருமூச்சோடு ஓர் ஆசனத்தில் அமர்ந்து வெளியே நோக்குகிறுன்)

**தேன்:** அவைக்கள வேலைகளால் அரசர் அலுத்தனர் போலும்; பழச்சாறு கொணர்ந்து தருகிறேன்;

**மாற:** (வேண்டாம் என்று கையசைத்து நிறுத்திவிட்டு மீண்டும் பார்வையைத் தூரத்தே ஓடவிடுகிறுன்)

**அல்லி:** பழச்சாறு எதற்கு? தேவி! தேன்மொழியின் தீங் கனிச் சாற்றுப் பாடல்கள் இருக்கின்றனவே! கயலின் நடனமும், அவளின் இசையும் சேர்ந்தால் தெய்வீ கமே இங்குக் குடிகொள்ளுமே!

**மானி:** ஆமாம், அதுவே நன்று. அரசர் பெருமான்இசைப் பிரியர், நடனப் பிரியர். அவரை உங்கள் பாடலா லும், ஆடலாலும் பரவசப் படுத்துங்கள்.

**மாற:** (எழுந்து நடந்தவாறே)இசை...நடனம்... ஆடல்... பாடல்.. இவையெல்லாம் எதற்கு? இவை மனிதனின் மனத்தைக் கிளரச்செய்து காமவசப் படுத்தும்; களி யாட்டில் ஈடுபடுத்தும். அடுத்த கணத்திலே தொலை யாப் பிறவிச் சகதியிலே அழுத்தித் துன்புறுத்தும். வேண்டாம் இவை எனக்கு. போங்கள், இவ்விடத்தை விட்டு, போங்கள்.

[தலையைப் பிடித்துக்கொண்டு அமர்கிறுன். பெண்கள் மலைத்து நிற்கின்றனர்; மானி சென்று அவனது காலடி யிலே அமர்கின்றுள்]

**மானி:** வேந்தே! இந்தப் பெண்களைத் திரும்பிப் பாருங் கள். பரமன் திறலைப் பாடுவதும், அவனது திருவிளை யாடல்களை நடனமாக்கி ஆடுவதுமன்றி வேறு பிழைவழியே அறியாத பேதையர் இவர்கள். இவர் களின் ஆடல் பாடலா காமபரவசமாக்கும்? "பத்தி யிலே வடித்தெடுத்த பைந்தமிழ்ப் பாடல்களைத் தேன் மொழி பாடவேண்டும். கயற்கண்ணி அதற்கு பாவத் தோடு ஆடவேண்டும். நான் அதனை அனுபவித்து மகிழ வேண்டும்" என்று எத்தனை தடவை சொல்லியிருப் பீர்கள்?

**மாற:** (பெருமூச்சு விட்டு) அதுவும் ஒருநாள்......இன்று 'சென்றது சென்றது வாழ்நாள் செறுத்துடன், வந்தது வந்தது கூற்று' மானி! என்னை வருத்தாதே. வேண்டாம் இந்தக் கூத்தெல்லாம்.

**மானி:** (மாறனின் கால்களைப்பற்றி மன்றாடுகிறாள்) தங்களுக்கு மிகப் பிடித்த திருவாலங்காட்டு மூத்த திருப் பதிகம் வேந்தே! அதனைப் பாடியும், ஆடியும் காட்ட வேண்டும் என்று இந்தப் பெண்கள் பட்ட அல்லல்கள் கொஞ்சமல்ல. இரவும், பகலும் ஒரே ஒத்திகை தான். ஒருதடவை, ஒரே ஒரு தடவை. ஆடச்சொல்லட்டுமா? என்ன?

[மாறன் மானியை நெடிது நோக்குகின்றான். விருப்பு, வெறுப்பு, அன்பு, பகை, கோபம், சாந்தம் முதலான பல வகை உணர்ச்சிகளும் அவன் முகத்திலே கலவையிடுகின்றன. நீண்ட மனப் போராட்டத்தின்பின் தலையைச் சம் மதத்திற்கு அறிகுறியாக அசைக்கிறான்]

**மாற:** சரி, உன் திருப்திக்காக நான் இதனை அனுமதிக்கிறேன். உம்...நடக்கட்டும்.

[மானி உட்பட யாவரது முகங்களும் மலர்கின்றன. மானி தனது கண்ணசைப்பால் 'நடனம் தொடங்கட்டும், என்று சைகை காட்டுகிறாள். தேன்மொழி வீணையில் நாட்டை ராகத்தை வாசித்துவிட்டுப் பாடத் தொடங்குகிறாள். அல்லி மத்தளம் வாசிக்கிறாள்; கயற்கண்ணி சிவ தாண்டவம் ஆடுகின்றாள்.]

தாளம்: ஆதி (பாட்டு) இராகம்: நாட்டை

**தேன்:** கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர்நீள்கணைக் காலோர் பெண்பேய்
தங்கி அலறி உலறு காட்டிற்
றாழ்சடை எட்டுத் திசையும் வீசி
அங்கங் குளிர்ந்தன லாடுமெங்கள்
அப்பனிடந்திரு ஆலங் காடே. (கொங்கை)

வாகை விரிந்துவெண் ணெற்றொலிப்ப
மயங்கிருள் கூர்நடு நாளையாங்கே
கூகையோ டாண்டலை பாடவாந்தை
கோடதன் மேற்குதித் தோடவீசி
ஈகைபடர் தொடர் கள்ளிநீழல்
ஈமமிகுசுடு காட் டகத்தே
ஆகங்குளிர் தனலாடு மெங்கள்
அப்பனி டந்திரு ஆலங்காடே. (கொங்கை)

கள்ளிக் கவட்டிடைக் காலைநீட்டிக்
கடைக்கொள்ளி வாங்கி மசித்துமையை
விள்ளவெழுதி வெடுவெ டென்ன
நக்கு வெகுண்டு விலங்குகாட்டிற்
றுள்ளித் துடித்துச் சுடுபிணத்தீச்
சுட்டிட முற்றுஞ் சுளிந்துபூதி
அள்ளி அவிக்கநின் றுடுமெங்கள்
அப்ப னிடந்திரு ஆலங்காடே.

[சிறிது சிறிதாக ஆவேசங் கூடிக் கயற்கண்ணி ஊழிக் காலத்து உருத்திரன் போலவே குதித்துக் குதித்தாடுகின்றாள். அவளின் உடல், முகம் யாவும் குங்குமச் சிவப்பாகின்றன. கண்கள் தீப்பிழம்பாய்க் கனன்றெரிகின்றன. வீணையும், மத்தளமும் ஒன்றோடொன்று இயைந்து லயித்துப் பயங்கரமான பேரொலியை எழுப்புகின்றன. ஆரம்பத்தில் தன்னை மறந்து நடனத்தை நயந்திருந்த மாறன் திடீரென்று மனம் மாறி முகஞ் சுழிக்கின்றான். 'துள்ளித் துடித்து' என்ற அடியிலே வெறுப்பு எல்லை மீற அவன் எழுந்திருந்து 'நிறுத்து' என்று பலமாகக் கத்துகிறான். ஆனால் மெய்ம்மறந்த நிலையிலே ஆடிய கயற் கண்ணிக்கு அது கேட்கவில்லை. தொடர்ந்து ஆடுகின்றாள். தேன் மொழியும் தன்னை மறந்த லயத்திலே இறுதி அடியைப் பாடுகிறாள். மாறன் கோபாவேசனாகி மீண்டும் 'நிறுத்து' என்று கத்துகிறான். முதலில் மத்தள ஓசை, பிறகு வீணை ஒலி, பின்பு பாடல் என ஒவ்வொன்றாய் நிற்கின்றது. கடைசியில் காலைத் தூக்கிய நிலையிலேயே கயற்கண்ணி

மலைத்து நிற்கின்றாள். வேந்தனின் காலடியிலேயிருந்த மானி ஏக்கத்தோடு அவனை நோக்குகிறாள்.]

மாற: (ஆவேசத்தோடு பல்லை நெருமி) போங்கள் இவ் விடத்தை விட்டு. என்னைக் கொலைகாரனுக்காதீர்கள் போங்கள்.

[கயற்கண்ணி தூக்கிய காலைக் கீழே விட்டு மருட்சியுடன் பார்க்கிறாள். பின் அவளும், தேன்மொழியும், அல்லியும் அச்சத்தோடு உள்ளே ஓடுகின்றனர், இசைக் கருவிகள் கம்பளத்திலே அநாதைகளைப்போலக் கிடக்கின்றன.]

மானி: (மாறனை நிமிர்ந்து நோக்கி அவனது காதிற்குக் கேட்கக் கூடியதாக மெதுவாக) அரசே! அரசே!

மாற: (தலையை நிமிர்த்தி) உ...ம்.

மானி: நடனம் நன்றாய் இல்லையா? பண்ணொழுகு பாடல் உங்களைப் பரவசம் செய்யவில்லையா? திடீரென்று இத்தனை பதற்றம் ஏன்?

மாற: (பேய் பிடித்தவன்போல் விழித்து) பதற்றம்...படபடப்பு .. ஆமாம் பதற்றப்பட்டு விட்டேன். எனக்கே காரணம் தெரியவில்லை.

[மானி எழுந்துசென்று விபூதிப் பேழையை எடுத்து வந்து விபூதியை அவன் நெற்றியிலே பூச வருகின்றாள். மாறன் அவளின் கையைத் தள்ளிவிடுகிறான்]

மாற: வேண்டாம், வேண்டாம். மீண்டும் நான் அறியாமை வசப்பட்டுச் சாம்பரைப் பூசி என் நெற்றியைப் பாழ் செய்யக் கூடாது. கொண்டு போய்விடு.

மானி: (திகைப்பும், அதிர்ச்சியும், கோபமும் நெளிய) என்ன இது? வேந்தே! நிர்மலமான, காணற்கினிய, கவின் நிறைந்த விபூதியையா இகழ்கின்றீர்கள்?

மாற: (ஏளனமாய் நகைத்து) அதை மாத்திரமா இகழ்கின்றேன்? அதைப் பூசியிருக்கும் யாரையும் எனக்குப் பிடிக்காது. ஏன் உன்னையுங் கூடத்தான். விபூதி

என்பது என்ன? கேவலம் பசுவின் சாணத்தை எரித்தெடுத்த சாம்பர். மதியிலிகள் அதற்கு மகத்துவம் கொடுத்துவிட்டார்கள். நானும் இதுநாள் வரையும் மடையனுய் இருந்துவிட்டேன். இனி அதனைத் திரும்பியும் பார்க்க மாட்டேன். எல்லாம் வெறும் குருட்டு நம்பிக்கை: வடித்தெடுத்த முட்டாள்தனம்!

**மானி:** (தன் செவிகளை இரு கரங்களாலும் பொத்தி) சிவ சிவ! வேந்தே! எவ்வளவு பெரிய அபசாரத்தைச் செய்கிறீர்கள் என்பது தங்களுக்குப் புரிகிறதா? பிறைசூடிய பெம்மானின் வழிவந்த பாண்டிய பரம்பரையினர் தாங்கள் என்பது மறந்துவிட்டதா? நினைவெல்லாம் நிர்மலனுய், வாக்கெல்லாம் மதியணிந்த மாதவனுய், உடலெல்லாம் அவன் சின்னங்களின் உறைவிடமாய் வாழ்ந்தவரல்லவா தாங்கள்?

**மாற:** மானி! குழந்தை வாழ்நாள் முழுவதும் குழந்தையாக இருப்பதில்லை; குருத்து என்றும் குருத்தாகவே இருந்துவிடாது. அறிவிலே குழந்தையாய், அநுபவத்திலே வெறும் குருத்தாய் இருந்த மாறன் என்று இனியும் என்னை எண்ணுதே. நான் அறிவுபெற்றுவிட்டேன். அநுபவத்தால் உயர்ந்துவிட்டேன். இனி ஆலவாயனும், அங்கயற்கண்ணியும் என் மன உறுதியை அசைக்க முடியாது. பகுத்தறிவு என்ற சுடர்விளக்கின் துணைக்கொண்டு பவ இருளைக் கடக்க எண்ணி முயலும் என் பாதையில் நீ குறுக்கிடாதே; வேண்டுமானுல் நீயும் என் வழியிலே வா.

**மானி:** (அவன் காலடிலே மண்டியிட்டு நின்று அவன் கைகளைப் பற்றிய வண்ணம்) வேண்டாம், வேண்டாம் அரசே! நீங்கள் சென்ற வழி பரிசுத்தமானது; செல்லும் வழியோ இருள் நிறைந்தது. தயைகூர்ந்து மீண்டும் பழைய வழிக்கே வாருங்கள், அறிவால் அவனைப் பெற முடியாது. அழுது உருகிக் கதறி 'அம்மையே, அப்பா' என அழைத்தால் செம்மேனி அம்மான் திருவருள் புரிவான்.

**மாற:** (கேலிச் சிரிப்புச் சிரித்தபடி) அம்மையாவது, அப்பனாவது! அப்படி ஒன்றும் இல்லை, ஆண்டவனே இல்லை.

**மானி:** (துடிதுடித்துப் பதைத்துத் துயர் மீறி) நீங்களா இப்படிச் சொல்கிறீர்கள்? சிவ அபசாரம் மிகப் பொல்லாதது வேந்தே!

**மாற:** (மானியைக் கடுமையாக நோக்கி) மானி! நல்லதும், அல்லதும் நான் அறிவேன். நான் ஆண்மகன், நீ பெண். எனக்கு அடங்கி நடக்கவேண்டியவள். ஆனாலும் நான் உன்னை அடக்கவில்லை. நீ விரும்பியபடி 'சங்கராசிவ' என்று தாளம்போட்டுக்கொண்டிரு. புனித நீறு என்று சாணம் எரித்த சாம்பரை அள்ளி அள்ளிப் பூசு; அதனால் எனக்கொன்றும் இழப்பில்லை;

ஆனால் நீ என் வழியிலே குறுக்கிடுவதை என்னால் சகிக்க முடியாது. 'பித்தனென்றும், பேயனென்றும், முத்தனென்றும், முதல்வனென்றும் இனியும் செபஞ் செய்து என் வாழ்க்கையைப் பாழ்செய்ய நான் விரும்பவில்லை, எனது கன்மங்களைத் தொலைத்துத் தீர்த்தங்கரனும் உன்னத நிலையை எய்துவதற்கு உன் வழி ஏற்றதன்று.

**மானி:** (விம்மி அழுதபடி) ஆனைமாமலை எனது பவித்திரமான அன்புச் செல்வத்தைப் புழுதியிலே போட்டு உருட்டிவிட்டது. இறைவனின் திருவடிகளிலே இணைய வேண்டிய மலரொன்று, சூறைக் காற்றிலே எற்றுண்டு இதழ் உதிர்ந்து வெறுமையாகிவிட்டது. (பெருமூச்சு விட்டு) எல்லாம் அவன் சோதனைதான்.

**மாற:** சோதனை...! பேதைப் பெண்ணே! உனக்கு ஒன்றும் தெரியாது. சொன்னாலும் புரியாது. நாளை ஆனைமாமலையிலிருக்கும் அடிகள் பலர் எனது அவைக்களத்திற்கு வரப்போகின்றனர்; அவர்கள் பாண்டி நாடெங்கும் அறிவொளி பாய்ச்சப்போகும் அற்

புதத்தை நீ காண்பாய். உன் மனமும் அவர்கள்பால் திரும்பி நீயும் ஞானமடைவாய்.

[மானி மேலும் பேசமுடியாது தளர்ந்து சோர்ந்து மூர்ச்சையாகி விழுகின்றாள். மாறன் சென்று அவளைத் தாங்கி ஓர் அரியணையிலே கிடத்துகின்றான்.]

மாற: (இரக்கத்தோடு) பாவம்! பெண்தானே? சிறிய தொன்றிற்கும் உணர்ச்சிவசப்படுவது இவள் இயல்பு. காலப்போக்கில் எல்லாம் சரியாகிவிடும். பூமலி அசோகமர்ந்த புனிதனின் பாதை இவளுக்குந் திறக் கட்டும்.

[நின்று அவளையே நெடிது நோக்குகின்றான்]

மாற: அழகுப் பெட்டகமாக, சௌந்தரிய தேவதையா கச் சோழன் அரண்மனையிலிருந்து இங்கு வந்தவள் இவள்: மான் என மருண்ட விழி காரணமாய் மானி எனும் பெயர் பெற்றாள்: என் இதயத்தையும் ஆட ரங்காய் ஏற்றாள்: இளமை என்ற நெய்யிலே அழகென் னும் சுடர்மணி விளக்காய் இவள் எரிந்துகொண் டிருக்கின்றாள்.

இன்னும் பத்தாண்டுகளில் இளமை நெய் தீர்ந்துபோ கும்: இவள் கூடுபற்றி ஒளிமங்கத் தொடங்கிவிடுவாள் முதுமையின் முதல் ஸ்பரிசம் இவளின் முகிற் கூந்தலிலே நரையாக வந்து விளையாடும். காலத்தின் கொடுநகம் இந் தக் கன்னக் கதுப்புக்களிலே பதிந்து திரையை ஏற்படுத் தும். உதயசூரியன் போல ஒளிவிடும் மேனியில், மாலை வேளையின் மம்மர் படர்ந்திடும்: இளமைக்குச் சிறிது சிறிதாய்ப் பிரியாவிடை கொடுத்து முதுமையின் வாயிற் படிக்கே இவள் சென்றுவிடுவாள். 'எல்லாப்படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை' என்ற உண்மைக்கு மானி சான்றாகிவிடும் நாள், வராமலா போகப்போகின்றது? 'முல்லை முகை முறுவல் முத்து" என்று நான் பாடிப் பரவிய இவளின் பற்களிலே மாலைக் கால மஞ்சள் வெயிலின் மங்கல் படி

யாமலா போகப்போகின்றது? இவளுக்கென்ன? உடல் எடுத்த எவர்க்குமே இதுதான் முடிவு!

உம். இத்தனை நாளும் நான் குருடனாய் இருந்துவிட்டேன்.

[சேமக்கலத்தில் தட்டுகிறான். தேன்மொழியும் கயற்கண்ணியும் வருகின்றனர்.]

**மாற:** இவளைத் தூக்கிச் சென்று மூர்ச்சை தெளிவியுங்கள்.

[தேன்மொழி ஓடிச் சென்று பதற்றத்தோடு மானியின் தலையைத் தூக்கி மடியில் வைக்கின்றாள். மாறன் சிறிது தயங்கி நின்றுவிட்டுப் போகின்றான். கயற்கண்ணி பக்கத்தில் இருந்த தண்ணீர்க் குவளையை எடுத்து மானியின் முகத்திலே தெளிக்கின்றாள்.]

**கய:** தேவியின் முகம் கருக அகம் கருகி அவருக்கெனவே தம் உயிரை வைத்திருந்த மன்னரா இவர்? எவ்வளவு மாறிவிட்டார்! எல்லாம் அந்தச் சமண சந்நியாசிகளின் சூழ்ச்சி!

**தேன்:** காலம் ஒரு காற்றாடி. காற்றடிக்கையில் மேலது கீழாகும், கீழது மேலாகும், பொறுத்துப் பார்ப்போம். இவரின் கால்களைப் பிடித்துத் தூக்கு.

திரை.

## காட்சி மூன்று

[ஆனைமாமலையினின்றும் வந்த சமணகுருமார் பீடமைந்த மெல்லணையில் அமர்ந்திருக்கின்றனர். அவர்களின் கரங்களை மயிற் பீலியும், குண்டிகையும் குடைகளும் அணி செய்கின்றன. அவர்கள் *சுவேதாம்பரர் (வெண்ணிற ஆடை அணியும் சமணத் துறவுப் பிரிவைச் சேர்ந்தவர்கள்.) ஆதலின் முழந்தாளுக்கு மேல் வெள்ளைத் துணியொன்றை அணிந்துள்ளனர். அவர்களின் தலைகளிலே சிறிய அளவில் மயிர்கள் ஒழுங்கற்று வளர்ந்துள்ளன

இவர்களின் தலைவர் ஹேமச்சந்திரர், மெலிந்த உருவமாயினும், அகன்ற நெற்றியும், கூரிய பார்வையும், உயர்ந்த எடுப்பான மூக்கும் உடைய தன்மைகளாலே தனிப்பட்டதோர் கம்பீரம் பொருந்தி விளங்குகின்றார். அவரே சபையில் மிக உயர்ந்த பீடத்தில் அமர்ந்திருக்கிறார். அவருக்கு அருகில் சற்றே தாழ்ந்த ஆசனத்தில் ஹேமச் சந்திரரின் பிரதம சீடரும், இரண்டாவது தலைமைக் குருவுமான மல்லிசேனர் அமர்ந்துள்ளார். அவர் பருத்த உடலும், சிறிய கண்களும் உருண்ட முகமும்

---

* சமணத் துறவிகளைச் சுவேதாம்பரர், திகம்பரர் என இரு பிரிவுகளாக வகுப்பர். சுவேதாம்பரர் – வெண்ணிற ஆடையர். திகம்பரர் – திக்கையே ஆடையாக அணிந்தோர். அஃதாவது நிர்வாணமாகத் திரிவோர். ஆனைமாமலையை அடுத்த பகுதிகளில் வாழ்ந்தோர் திகம்பரராகவே இருந்திருத்தல் வேண்டும்.

'துன்னிய அழுக்கு மெய்யில் தூசிலார்'

(தூசு – துணி) திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் புராணம். பாடல் 636. ஆனால் மேடை நாகரிகம் கருதி, ஈண்டுச் சுவேதாம்பரர் எனக் குறிக்கப்பட்டது.

பெற்றவராய் விளங்குகிறார். துறவுப் பாங்கேயற்ற ஒரு குரூரத் தன்மை அவரது விழிகளிலும் உதடுகளிலும் ஒளித்திருப்பது போல ஒரு பிரமையை அவரது தோற்றம் உண்டாக்கின்றது. மற்றத் துறவிகளைப்பற்றிக் குறிப்பிடத் தக்க விசேட அம்சம் ஒன்றும் இல்லை. அவர்கள் தத்தம் தகுதிக்கேற்ற ஆசனங்களிலே அமர்ந்திருக்கின்றனர்.

இக் குருமார்களின் ஆசனங்களுக்கு ஒரு படி கீழே மாறனது ஆசனமும், அதற்கு அடுத்த படியிலே அமைச்சர் முதலானோரது ஆசனங்களும் உள்ளன. அவற்றில் முறையே அரசனும், மந்திரி பிரதானிகளும் அமர்ந்திருக்கின்றனர்.

ஹேமசந்திரர் அரசனையும், நாட்டு மக்களையும், அருக தேவனையும் வாழ்த்திப் பாடும் பாடல் ஒன்றினை இசையோடுரைக்கச் சமண குருமார் அவரைத்தொடர்ந்து பாடுகின்றனர்.

**ஹேம:** (பாடுகிறார்) இராகம்: ஆரவி

* வெற்றியும் நேர்மையும் வேந்தற்காகுக
உற்றிடுங் காலத்து உயர்மழை பொழிக
பிணியும் வறுமையுங் களவுந் தொலைக
இணையிலா ஞானத் தெம்பெரு மானும்
அசோக நீழலில் அமர்ந்தமா தவனும்
மண்ணிடை நிலவிடும் மன்னுயிர்க் கெல்லாம்
மகிழ்வினை ஊட்டுமோர் வாழ்வினை நல்குக.

**ஹேம:** மன்னவ! மந்திநிறை அமைச்சரே! மற்றும் பிரதானிகளே! மூடநம்பிக்கைகள் நிறைந்ததும், பயனற்றதுமான ஒரு சமயத்தின் பிரதிநிதிகளாய் நேற்றுவரை இருந்தீர்கள். நான்முகத் தேவின் நல்லருள் உமது திசையைத் திருப்பிவிட்டது. இனி நீங்கள்

---

* "Let the king be victorious and righteous. Let there be rain in every proper season. Let the law of the Jaina give all happiness to all the living beings of the world" (Jainism – Outlines of Indian Philosophy P 167.)

சாம்பரைப் பூசிச் 'சங்கரா சிவ' எனக் கூறித்திரியும் சைவர்களல்லீர். அறிவெனும் ஒளி விளக்கேந்தி, அன்பெனும் ஊன்றுகோலின் துணையோடு, அறவழியிலே செல்லும் அந்தணாளர்கள்; சமணர்கள். நீர் வாழ்க.

எமது சமயம் பற்றிய ஐயங்கள் இருப்பின் அவற்றைத் தயங்காது கேளுங்கள். தெளிவாக விளக்குவோம்.

[அரசனும், மற்றவர்களும் ஒருவரையொருவர் பார்க்கின்றனர். அவர்களின் முகங்களிலே தயக்கமும், அச்சமும் காணப்படுகின்றன. அதனைக் கண்ட மல்லிசேனர் ஏளனமாக நகைக்கின்றார்]

மல்லி: எமது குருவாகிய ஹேமச்சந்திரர் கூறியவை உங்களுக்கு ஆறுதல் தரவில்லையா? அல்லது முதன் முதல் அறிவுச் சுடரின் ஒளியைக் கண்டதும் கண்களோடு கருத்தும் கூசியதா?

ஹேம; மல்லிசேனரே! பொறும்; அவர்கள் சிந்திக்கட்டும், சிந்தித்து, உணர்ந்து, தெளிந்து வாழ்வாங்கு வாழட்டும், உணர்வின் ஆரம்ப நிலையான மயக்கத்தைப் போக்குவதுதானே எங்கள் தொழில்? அதனை நாம் செய்வோம். மன்னவ! ஏன் தயக்கம்? முதற் கேள்வி உன்னிடமிருந்தே வரட்டுமே! கேள்.

மாற: (எழுந்துநின்று தயங்கித் தயங்கி) அடிகளே! நானும் இங்குள்ளோரும் பின்பற்றிவந்த சமயம் வெற்றுணர்ச்சியை வளர்ப்பதென்றும், சமணமே உண்மையான அறிவுச் சமயமென்றும் சொல்லி வருகின்றீர்கள்?

ஹேம: (சிறிதே நகைமலர) ஆமாம்;

மாற: அறிவுச் சமயம் என்பதன் பொருள் யாது? அறிவிற்கு வரைவிலக்கணம் செய்ய முடியுமா? அறிவால் எல்லாம் ஆகிவிடுமா? சற்றே கருணை கூர்ந்து விளக்குங்கள்;

ஹேம: நல்ல கேள்வி. எமது சமயத்தின் அடிப்படியே இந்த அறிவாராய்ச்சிதான். அறிவை நாம் இருபெரும் பிரிவுகளாக வகுக்கின்றோம். உடன் அறிவது என்பது

ஒன்று: மற்றது ஒன்றன் ஊடாக அறியும் ஊடக அறிவு. முன்னதனை அபரோக்ஷஞானம் என்றும், பின்னதனைப் பரோக்ஷ ஞானம் என்றும் கூறலாம்.

அபரோக்ஷ ஞானமாகிய ஊடக அறிவை மதி, க்ஷுருதம் என இரு உப பிரிவுகளாகக் கொள்ளலாம்: புலன்களினூடு நாம் பெறும் அறிவே மதி என்பது. புலன்களின் குறைநிறைகளுக்கேற்ப இவ்வறிவு மாறுந் தன்மையுடையது. ஆதலின் இதுவே அறிவின் மிகக் கீழ்ப்படியில் உள்ளதாகும்: அடுத்தது க்ஷுருதம். நீங்கள் ஆகமப் பிரமாணம் என்பீர்களே? அதுவே க்ஷுருதம்: அதாவது நூல்கள் வாயிலாகப் பெறும் அறிவு:

மாற: (சிரித்தபடி) நூலாற் பெறும் அறிவு குறைபாடானது என்று சொல்லவேண்டியதில்லை. எனது அவைக்களப் புலவர்கள் நாள்தவருமல் பிடிக்கும் சண்டையிலிருந்து நான் கொண்ட முடிவு இது: (புலவர்களைப் பார்க்கிறுன். அவர்கள் மெல்லச் சிரிக்கின்றனர்)

ஹேம: சரியாகச் சொன்னுய், நூல்வாயிலாக உண்மையான அறிவைப் பெறமுடியாதுதான். எனவே அதுவும் தாழ்வானதாகவே எம்மாற் கொள்ளப்படும்.

அடுத்து பரோக்ஷஞானம் என்னும் உடன் அறிவை நோக்குவோம். இது அவதி, மனபர்யாயம், கேவலம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படும். அவதி என்பது தொலைவிலுள்ள பொருள்களையும், வெவ்வேறு காலங்களில் நிகழ்வதையும் உணரும் அறிவு. ஆனல் புலனுணர்வுக் காட்சியாற் பெறுகின்ற அறிவின் குறைபாடு இதற்கும் உண்டு. ஆதலின் இதனையும் முற்றறிவு என்று கூறவியலாது. அடுத்தது மனபர்யாயம். மற்றைய ஆன்மாக்களின் உள்ளங்களிலே நிகழ்வனவற்றை உய்த்துணர்வதே மனபர்யாயமாகும். நூலறிவுபோல மனபர்யாயமும் சிற்சில வேளைகளிற் பிழைபடுவதால் இதுவும் பூரண அறிவன்று.

மாற: அப்படியானுல் கேவல ஞானந்தான் முற்றறிவு என்பது உங்கள் கருத்தோ?

**ஹேம:** ஆம். இதுவே மிக்குயர்ந்த பரிபூரண ஞானம். முத்தர்களாகிய தீர்த்தங்கரர்களே இவ்வறிவைப் பெற வல்லவர்; சாதாரணராய் இதனை அடைய முடியாது. எல்லாவற்றையும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அறியவல்ல பேரறிவு என இதற்கு விளக்கம் கூறலாம்.

[மதிவாணர் என்ற அமைச்சர் எழுந்து நிற்கின்றார்]

**ஹேம:** மதிவாணரே! ஏதாவது ஐயம் உள்ளதோ?

**மதி:** ஒரு சிறிய ஐயம்.

**ஹேம:** சொல்லுங்கள்.

**மதி:** கேவல ஞானத்தை எல்லா ஆன்மாக்களும் அடைய முடியுமா?

**ஹேம:** ஆம்! கன்மத் தளையை அறுத்து விடுதலை பெறும் ஆன்மாக்கள் யாவும் அதனை அடையலாம்.

[மேதாவியார் எழுந்து நிற்கின்றார்]

**மாற:** (சிறுநகையுடன்) புலவர்பெருமான் மேதாவியார்க்கும் ஐயம் ஏற்பட்டது போலும்!

**மல்:** (பெரிதாய் நகைத்து) மேதாவியார் அல்லவா? ஐயம் ஏற்படுதல் இயல்புதானே?

[யாவரும் சிரிக்கின்றனர்]

**ஹேம:** 'கற்கக் கழிமடம் அஃகும்' அவர் கேட்கட்டும். மேதாவியாரே! தங்கள் ஐயம் என்னவோ?

**மேதா:** கன்மத் தளையை அறுத்திட யார் உதவுவது? அவ்வாறு கன்மந் தொலைந்த ஆன்மா அடையும் இறுதி நிலை என்ன?

**மல்:** (ஏளனமாக) மேதாவியார்க்குரிய மேதா விலாசமான கேள்விகள்தாம்.

**ஹேம:** மல்லிசேனரே! (அவரைச் சற்றுக் கடுமையாய் நோக்குகிறார். மல்லிசேனர் வாயைக் கையினால் பொத்திப் பயபத்தியோடு இருக்கிறார். ஹேமச்சந்திரர் தொடர்கிறார்.) புலவரே! தங்கள் கேள்விகள் பொருத்தமானவையே. இவற்றிற்கு விடையிறுக்க

எமது சமயக்கொள்கை யாவும் விரிவாக விளக்கப் படல்வேண்டும். அதற்கு இது நேரமன்று.

[சபையோர் ஹேமச்சந்திரர் சமாளிப்பதாகக் கருதி ஒருவரை ஒருவர் முழங்கையால் இடித்து, கண்களால் தமது அதிருப்தியை வெளியிடுகின்றனர். ஹேமச்சந்திரர் அதனை நுட்பமாகக் கவனித்தவர், புன்முறுவலோடு தொடர்கின்றார்.]

**ஹேம:** எனினும் சுருக்கமாக விளக்குகின்றேன். கன்மங்கள் எட்டு வகைப்படும். இவற்றுள் முதலாவது ஞான வரணீயம். இது அறிவை மறைத்து இருள் சூழ வைப்பது; மடைமையை நோக்கி வழிப்படுத்துவது. இரண்டாவது தர்சன வரணீயம். இது காணுங் காட்சிகளில் மயக்கத்தை ஏற்படுத்தி வருத்துவது. மூன்றுவது மோகனீய கர்மம். இது பற்றை வளர்த்து அறியாமையுள் அழுத்தும். அடுத்தது வேதனீய கர்மம். இது உலக இன்பங்களை நிலையானவை எனக் காட்டி உலகப் பற்றுள் அழுத்துவது.

நாமகர்மம் என்பது உடலை உண்டாக்கி உயிரை அதனுட் சிறை செய்வது, அந்தராயகர்மம் கரணங்கள் கருவிகளை ஆக்கும். கோத்திராயகர்மம் உயிர் பிறக்க வேண்டிய குடும்பத்தையும், ஆயுஸ்ய கர்மம் அதன் ஆயுட் காலத்தையும் நிர்ணயிக்கின்றன.

[மேதாவியார் ஏதோ கேட்பதற்கு எழுந்திருக்க முயல்கின்றார். அருகில் இருந்த புலவர் ஒருவர் அவரை இழுத்து இருத்த முயல்கின்றார். ஆனல் புலவர் திமிறியபடி எழுகின்றார்]

**மேதா:** எல்லாம் சரி அடிகளே! தாங்கள் ஒவ்வொன்றிற்கும் பல உப பிரிவுகளைச் சொல்கின்றீர்களேயன்றி அடிப்படையை விளக்குவதாயில்லை. எனது கேள்வி கன்மங்களைத் தொலைக்க உதவுபவர் எவர்? ஆன்மாவின் இறுதி நிலை என்ன என்பதுதான்.

[சபையில் சலசலப்பு உண்டாகின்றது. சபையினர் புலவர்க்குச் சாதகமாயும், பாதகமாயும் வெளியிடும்கருத்

துரைகள் வளர்ந்து இரைச்சல் உண்டாகின்றது. மல்லி சேனர் பொறுமையை இழந்து கடுமையாகச் சபையை நோக்குகின்றார்: ஆனால் ஹேமச்சந்திரரோ அவரைப் பொறுமையாக இருக்குமாறு கையமர்த்திப் புன்முறுவல் பூணுகின்றார். மாறன் கோபத்தோடு எழுந்திருக்கின்றான்]

**மாற:** இது சபை. இங்கு எழுந்தருளியிருப்போர் சான்றோர்கள். ஆய்ந்தவிந்தடங்கிய கொள்கையர். இவர்களிடம் ஐயங்களை வினவி விளக்கம் பெறவே சபையைக் கூட்டினோம்: வாய்ப்போர்க்கு இது இடமன்று.

[அமர்கிறான். சபையில் மரண அமைதி, ஹேமச்சந்திரர் தொடர்கின்றார்.]

**ஹேம:** முற்கூறிய கன்மங்களின் சேர்க்கை, ஆன்மாவைச் சம்சரர பந்தத்தில் அழுத்தி அது மேலெழாமல் தடுக்கின்ற வேளையில், அர்கத்துக்களாகிய துறவிகள் அதற்கு வழிகாட்டுகின்றனர். எனினும் ஆன்மா தனது முயற்சியாலேயே கன்மங்களைத் தொலைத்தல் வேண்டும்,

**மல்:** அதாவது முத்திநிலை என்பது தற்பரிசுத்தமே: ஒவ்வோரான்மாவும் முத்திநிலையில் கடவுள் ஆகின்றது, அதுதான் முடிவு. மேதாவியாரே! திருப்திதானே?

**மேதா:** இப்பொழுதுதான் எனது கேள்விக்கு வந்தீர்கள். உங்கள் கருத்து ஆன்மாக்கள் தெய்வநிலை எய்தலாமேயன்றி அவற்றிற்கு மேலாக இறைவன் ஒருவன் இல்லை என்பதுதான்; ஆன்மா தன்னைச் சுத்தம்செய்ய இறைவனின் துணை வேண்டியதில்லை என்பதுதான்; இறைவன் ஆன்மாக்களிலே கொண்ட கருணையாலே ஐந்தொழில்களையும் நிகழ்த்துவதெல்லாம் பொய் என்பதுதான். அப்படித்தானே?

**ஹேம:** நாங்கள் ஏகாந்த வாதிகள் அல்ல. எந்த உண்மைக்கும் பல பக்கங்கள், பல முடிவுகள் உண்டு என்பதில் நாம் நம்பிக்கையுடையோம்.

மல்: அதாவது நாங்கள் அநேகாந்த வாதிகள். எனவே கடவுள் உண்டு என்ற உண்மையில் கடவுள் இல்லை என்ற உண்மையும் அடங்கியுள்ளது என்றே கருதுகின்றோம். உங்களைப்போல் யானையை அறிய முயன்ற குருடர்களாக ஒன்றையே பற்றி நிற்பது எம் வழக்கமன்று. அஸ்தி - நாஸ்தி. உண்டு - இல்லை. இதுவே எமது கொள்கை.

ஹேம: மல்லிசேனரே! நீர் சற்றுப் பொறுமையாக இரும். மேதாவியாரே! எங்கள் கடவுட் கொள்கை என்ன என்பதுதானே உமது கேள்வி?

மேதா: ஆமாம்.

ஹேம: கடவுள் இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். இந்த இரண்டுமே உண்மையுமாகலாம். அல்லது இரண்டும் பொய்யுமாகலாம். இரண்டில் ஒன்று பொய்யாகலாம். மற்றது உண்மையாகலாம் மற்றது உண்மையாகி முன்னது பொய்யுமாகலாம்.

மேதா: நீங்கள் குழப்புகின்றீர்கள்.

ஹேம; (சிரித்தபடி) தெளிவில்லாத இடத்தே சிறு குழப்பமும் பெருங் குழப்பமாகிவிடும். இல்லையா? அது போகட்டும். கடவுளுக்கென நீங்கள் வகுத்துள்ள பண்புகளையெல்லாம் ஒவ்வொரு மனிதனும் அடையலாம் என்பதுதான் எங்களின் முடிவு, இதற்கு ஒரு தெய்வம் உதவவேண்டும் என்பது அவசியமில்லை. அது இருக்கிறதா இல்லையா என்ற ஆராய்ச்சியும் வேண்டுவதில்லை. சரி, கடவுள் இருக்கிறார் என்றே வைத்துக்கொள்வோம் அவர் பற்றற்றவர் என்கிறீர்கள். பற்றற்றவர் இந்த உலகைப் படைப்பதேன்? காப்பதேன்? இவ்விரண்டும் பற்றிலே அழுந்துவிப்பனவல்லவா?

மதிவா: ஆக இறைவன் இல்லை என்பது உங்கள் முடிவு!

ஹேம: அப்படி நீங்கள் கருதினுல் அதை மறுக்கவும் முடியும்; ஏற்கவும் முடியும். ஆனுலும் அது பயனற்ற

செயல்: எங்கள் முடிவு இதுதான். *ஆன்மா பரிபூரண ஞானம் பெறுகையில் அது தெய்வத் தலைமை எய்துகின்றது அதைவிட வேறு கடவுள் இல்லையென்று உறுதியோடு கூறுகின்றேன்.

மதிவா: அப்படியானால் நாமெல்லாம் தோற்றிய வகை எவ்வாறு? எமது தோற்றமூலம் என்ன?

ஹேம: அப்படிக் கேளுங்கள். உலகிலுள்ள பொருள்களையெல்லாம் நாம் இருவகையாகப் பிரிக்கின்றோம். ஒன்று ஜீவன், மற்றது அஜீவன், ஜீவன் இயங்கும். அஜீவன் இயங்காது, அஜீவன் பரமாணுக்களின் சேர்க்கையால் அமையும் புற்கலங்கள் சேர்ந்த ஸ்கந்தங்களால் உண்டாவது. இந்த ஸ்கந்தங்கள் யாவும் ஒன்று திரண்ட மகாஸ்கந்தமே இந்த உலகம். புற்கலமாவது சடப்பொருள்; அது இருத்தற்கான இடம் வெளி அல்லது ஆகாசம். இதனோடு காலம், தர்மம், அதர்மம் என மூன்றும் சேர உலகம் அமைகின்றது.

மேதா: ஓர் ஐயம்.

ஹேம: என்னவோ?

மேதா: சடப் பொருள்களின் இயற்கைக்கும் தருமம், அதருமம் என்பவற்றிற்கும் என்ன தொடர்பு?

ஹேம: தருமம், அதருமம் என்பன உங்கள் சமயத்தவர் கூறும் ஒழுக்கவகைகளல்ல. அணுக்களின் சேர்க்கையால் புற்கலங்கள் உண்டாகி அவை பிறகு ஸ்கந்தங்களாகின்றன அல்லவா? இந்த அணுக்கள் காலப் போக்கில் இல்லாது போய்விடின் உலகத் தோற்றம் இல்லாது போய்விடுமே! ஆகவே அதருமம் அவ்வணுக்களை உலகிடை நிலைக்க வைக்கின்றது. தருமமோ அவை சேர்ந்து செயற்பட்டு இயங்கவைக்கின்றது.

---

* "Thus every soul can attain godhead when it is perfect. The Jainas do not believe in one perfect being like the God of other religions". The Jaina Philosophy - History of Philosophy; Eastern & Western P 148.

மல்: குருவே! இவையெல்லாம் இவர்களுக்கு எங்கே விளங்கப்போகின்றது?

மேதா: தெளியவைப்போம் என்றீர்களே! தெளியவைக்கத் தெளிந்த அறிவுவேண்டும். அது உங்கள் குருவிடமுண்டு என நான் எதிர்பார்த்தது தவறு, என்ன? [எல்லாரும் சிரிக்கின்றனர். மாறன் பேச்சை மாற்ற நினைத்துக் குலச்சிறையாரை நோக்குகின்ருன்.]

மாற: என்ன குலச்சிறையாரே! வந்ததிலிருந்து உமது கருத்தை வெளியிடாமல் இருக்கிறீரே?

குலச்: (தமது நீறணிந்த நெற்றியையும், உருத்திராக்க மாலைகளையும் காட்டி) நான் பேசவேண்டியதை இவை பேசிவிடுகின்றன, எனது கேள்வி, விடை எல்லாம் இவைதாம்! (சிரிக்கிருர்)

ஹேம: குலச்சிறையாரின் மனம் இன்னும் பண்படவில்லை. காலம் மாறும்,

குல: (ஏளனமாக நகைத்து) ஆம்! காலம் மாறத்தான் செய்யும். இருந்து பார்ப்போம். நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

ஹேம: உலக அமைப்பைப் பற்றிச் சொன்னேனல்லவா? இந்த உலகோடு ஜீவன் இணையப் பிராணிகள், தாவரங்கள், மனிதர் முதலாகத் தோன்றிச் செயல் நடைபெறுகின்றது. உணர்வுள்ள ஜீவன், தான் சேருகின்ற உடலின் அளவிற்கேற்பப் பருத்தும், சிறுத்தும் விளங்கும்.

[மேதாவியார் சிரிக்கின்ருர். மாறன், மல்லிசேனர் முதலியோர் அவரைக் கோபத்துடன் பார்க்கின்றனர். ஹேமச்சந்திரர் வழக்கம்போலத் தமது உணர்ச்சிகளை அடக்கியபடி முறுவலிக்கிருர்.]

ஹேம: புலவர்பெருமான் சிரிப்பதேனே?

மேதா: இல்லை. ஜீவன உடலுக்கேற்பப் பருத்தும் சிறுத்தும் விளங்கும் என்றீர்களே? அவ்வாருயின் எனது

கை வெட்டப்படுமானால் எனது உயிரின் ஒரு பகுதியும் அறுந்து அழிந்துபோகும். இல்லையா? அப்போது எனது கையைப்போல உயிரின் ஒரு பகுதியும் என்னை விட்டு நீங்கும்; நினைத்தாற் சிரிப்பாயிருக்கிறது;

[மேதாவியார் பின்பும் சிரிக்கிறார். ஹேமச்சந்திரர் பதிலிறுக்கவியலாது தடுமாறுகின்றார். 'அது...' என்று இழுக்கின்றார்,]

குலச்: (ஏளன நகை செய்து) மேதாவியார் ஒரு குதர்க்க வாதி, இருள்நிறைந்த, மூடத்தனம் நிறைந்த ஒரு சமயத்தின் பிரதிநிதியாக இருந்தவர். நீங்கள் அதைக் கவனிக்கவேண்டா; உங்கள் அறிவுரையைத் தொடருங்கள்.

ஹேம: நல்லது... இவ்வாறு ஜீவனும் அஜீவனும் ஒன்று சேர்ந்து...

குலச்: அதாவது ஊழ்வினை உருத்து வந்து இரண்டையும் ஒன்று சேர்த்து, கருத்தா வேறின்றித் தானாகத் தன் வழியில் இயங்கி...

ஹேம: (அதிசயப்படுபவர் போலக் காட்டி) ஆமாம்! அப்படித்தான்; நீங்கள் நல்ல தெளிவான அறிவு படைத்திருக்கிறீர்கள்.

குலச்: உங்களிடம் இல்லாததும், என்னிடம் உள்ளதும் அது ஒன்றுதான். மனிதாபிமானத்தால் உங்கள் நிலைக்கு வரலாம் என்றாலும், அது என்னை விட்டு நீங்காமல் இருக்கிறதே! என்ன செய்வது? சரி, சரி! அரசர் பெருமான் பொறுமையை இழப்பதுபோலத் தெரிகிறது நீங்கள் நடத்துங்கள்.

[எல்லாரும் சிரிக்கின்றனர். ஹேமச்சந்திரர், குலச்சிறையாரின் நாவடியால் துவண்டாரேனும் தமது இயல்பான சுபாவத்தால் அதனைச் சமாளித்து ஒன்றும் நடவாதவர் போலத் தொடர்கின்றார்.]

**ஹேம:** ஆக, கன்ம வினைகளிலே கட்டுண்ட ஜீவன் பாவச் செயல்களிலே தொடர்ந்து ஈடுபடாமல் தடுக்க எமது சமயம் உன்னதமான குறிக்கோள் ஒன்றினை வகுத்துள்ளது. பார்க்கப்போனால் அதற்கு இணை வேறு இல்லை.

**மாற:** (குலச்சிறையாரையும், மேதாவியாரையும் நோக்கியபடி) அடிகளே! அதனை விளக்கி எமது அறியாமையைப் போக்கியருளுங்கள்.

**ஹேம:** "சம்யக் தர்சன ஞான சாரித்ராணி
மோக்ஷ மார்க்கஹ"

என்று எமது சமய முதல்வரான உமாஸ்வாமி திருவாய் மலர்ந்தருளியுள்ளார். உண்மை அறிவு, உண்மை நம்பிக்கை, உண்மை ஒழுக்கம் என்பனவே வீடுபேற்றிற்கான வழிகள் என்பது இதன் பொருள். இதனை ஓர் உதாரணத்தால் விளக்கலாம். நோயால் பீடிக்கப்பட்ட ஒருவன் நோய் நீங்குதற்கு வைத்தியரில் நம்பிக்கை வைத்து, வைத்தியர் தரும் மருந்தின் தன்மையறிந்து, மருந்தைக் கூறிய முறைப்படி உண்பது நோய் தீர அவசியம் என்பதை அறிவீர்கள். இதுபோலவே எமது தீர்த்தங்கரர்களில் நம்பிக்கை வைத்து அவர்களின் அறிவுரைகளை அறிந்து அவற்றின் வழி ஒழுகுதல் வேண்டும்.

**குலச்:** அதாவது இம் மூன்று விடயங்களிலும் உண்டு-இல்லை என்ற அஸ்தி-நாஸ்திவாதம் நிகழ்த்தக்கூடாது. அப்படித்தானே? சரி, சொல்லுங்கள்.

**ஹேம:** அறிவதும் நம்புவதும், முக்கியமென்றாலும் அறிந்த நம்பிய வழியில் ஒழுகுவதுதானே மிக முக்கியம்? அவ்வாறு ஒழுகினால்தானே சம்சாரபந்தங்களைக் களைந்தெறியலாம்? எனவே நாம் ஒழுக்கத்தை உயிரென ஓம்புகின்றோம். அதனை நாம் விரதம் என்று உரைப்பதிலிருந்தே அதன் புனிதத்துவத்தை உணரலாம். ஒழுக்கமாகிய விரதம் ஐந்தாகப் பகுக்கப்பட்டுள்ளது.

அவை அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம் என்னும் கள்ளாமை, பிரமச்சரியம், அபரிஹ்ரகம் என்னும் பொருட்பற்றின்மை என்பனவாம். இவற்றை மிக உறுதியோடு கடைப்பிடித்தால் மெய்யாகவே முத்திப் பேருகிய கேவல ஞானம் வந்தெய்தும். இந்நிலையில் சாதாரண ஆன்மா பரமான்மா ஆகிவிடுகின்றது.

மதி: உங்கள் நெறியினை வரவேற்கின்றேன். ஆனல் உலகப்பற்றை அறவே ஒதுக்கிக் கடுமையான துறவு வாழ்க்கையை மேற்கொள்ள எல்லார்க்கும் முடியுமா என்பதே என்கேள்வி. அன்றியும் உண்ணும் உணவிலும், குடிக்கும் நீரிலும் கூடக் கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவது எல்லார்க்கும் இயல்வதா? இதுவே என் ஐயம்.

ஹேம: நல்ல கேள்விகள் கேட்டீர்கள். சொல்கிறேன் கேளுங்கள். சமணரிடையேயும் துறவிகள், இல்லறத்தார் என்ற இரு பிரிவுகள் உண்டு. இங்குக் கூறிய விரதங்களை அணுவும் பிசகாமல் கடுமையாக அனுஷ்டிக்க வேண்டியவர்கள் துறவிகளாகிய நாங்களே. இல்லறத்தார் பிரமசரியத்தைக் காப்பதென்பது ஏகபத்தினி விரதராய் வாழ்தலே. இவ்விடயத்தில் மனம், வாக்கு, காயமாகிய மூன்றிலும் காக்கவேண்டிய பிரமச்சரியம் இல்லறத்தார்க்கு இல்லை. இதைப் போலவே அஹிம்சையிலும் ஊனுண்ணல் மாத்திரம் அவர்களுக்குத் தவிர்க்கப்பட்டிருக்கிறது. இதனுலேயே இல்லறத்தாரின் விரதத்தை அணுவிரதம் என்கிறோம். அணுவிரதம் என்ருல் சிறிய விரதம் என்பது பொருள். துறவிகளோ மிகக் கடுமையான மகாவிரதத்தை அனுஷ்டித்தல் வேண்டும்.

எமது மதத்துவங்களை ஓரளவு விரித்துரைத்தேன். உங்கள் ஐயங்கள் தெளிவடைந்திருக்கும் என்று நம்புகின்றேன். இனி எங்கள் வழியில் வர யாது தடையும் இல்லையே?

[சபையெங்கும் 'இல்லை, இல்லை, இல்லை' என்ற ஒலி. ஹேமச் சந்திரரின் முகம் மலர்கின்றது.

**மல்:** இன்றிலிருந்து அருகதேவனின் திருநாமமே இந்நாடெங்கும் ஒலிக்கும். பாண்டிநாடு சமணத்தைச்சார்ந்து பவித்திரமாகும். அப்படித்தானே?

[எங்கும் ஆம் ஆம் ஆம் என்ற ஒலி]

**மாற:** (மகிழ்ச்சியோடு எழுந்து நின்று) 'ஆம்' என்று உரைப்பது மாத்திரம் போதாது. பரிபூரணமான மனத்தோடு சமணத்தைத் தழுவியோர் எழுந்து நின்று உங்கள் ஒப்புதலைக் காட்டுங்கள்.

[ஒவ்வொருவராய் எழுந்து நிற்கின்றனர், மேதாவியார் தயங்குகின்றார். அரசியின் கடுமையான பார்வை அவரில் விழ அவரும் அஞ்சி நடுநடுங்கி எழுந்து நிற்கின்றார். குலச்சிறையார் மாத்திரம் புன்முறுவல் கருகர்தவராகக் கம்பீரத்தோடு அமர்ந்திருக்கின்றார்,]

**மாற:** குலச்சிறையாரே! நீர்...? இங்கிருப்போர் யாவரும் பேதையர் என்பது உம் கருத்தோ? நீர் சமணராகப் போவதில்லையா?

**குல:** (எழுந்திருந்து) பாண்டிநாட்டிலே பேய்கள் பீடம் ஏறத் தொடங்கிவிட்டன. இனிச் சாத்திரங்களெல்லாம் பிணந்தின்னத் தொடங்கும். ஆனால் குலச்சிறையின் நெற்றியும், கழுத்தும், நினைவும் உயிர்ப்பும் என்றும் பிழைபோகா. கடைசிமூச்சுக் கழன்று செல்லும்வரை 'சிவ, சிவ' என்றே என் நாப் பேசும். நான் வருகிறேன்.

[செல்கிறார். சபையோர் மலைத்து நிற்கின்றனர். மாறனும், மல்லிசேனரும் வெகுளிகொண்டு பல்லை நெருமுகின்றனர். ஹேமச்சந்திரர் புன்முறுவலால் தமது உணர்ச்சிகளுக்குத் தலையிடுகின்றார்.]

திரை

## காட்சி நான்கு

[மானியின் பூசையறை. பார்வதி சமேத பரமேசுவரனின் அழகுத் திருவுரு அறைநடுவே பொலிந்து விளங்குகின்றது. தீபங்களும் தூபங்களும் எரிந்து அவ்விடத்தின் புனிதத்திற்கு மெருகேற்றுகின்றன. மானி சிலைக்கு முன்பு அமர்ந்திருந்து பாடுகின்றாள்.]

பாட்டு

ஆலமாம் விடத்தையுண்டு சாலவே யருள்கனிந்த
ஆலவாயின் அப்பனேயின் றுன்னை
ஆதிபரை யோடுவந்து சீர்தருக என்றழைக்கின்
அருள்தாரா தொடுங்கிநிற்றல் நன்றோ
மருள் இரா அழித்திடுதல் என்றோ

காலையுற்ற சோதியென்ன ஞாலமுற்ற மடைமைநீங்கக்
காலமின்னும் வந்ததில்லை யாமோ
காதலுற்ற நெஞ்சினோடும் ஆதி ஆதி என்றழைப்பின்
கருணையின்றி உருக்கரத்தல் நன்றோ
மருளிரிந்து மாய்த்திடுதல் என்றோ

ஓலமிட்டுன் நாமமொன்றே உன்னிஉன்னி உயிரழிந்த
ஒருத்தியென்றே எண்ணிடாமை ஏனோ?
உத்தமராம் அன்பருக்கு முத்திவழியை நல்கிடாமல்
ஒளியறுத்த நிலையிருத்தல் நன்றோ
அளியிருத்தி அடிமைகொள்ளல் என்றோ

[விம்மியழுதபடி சிலையின் முன்பு தலைசாய்த்துக் கிடக்கிறாள். அந்த வேளையில் குலச்சிறையார் அங்கு வருகின்றார். மானி கிடக்கின்ற நிலைகண்டு மனம் உருகியவராய்த் தமது விழிநீரைத் துடைக்கின்றார்.]

**குல:** தேவி!... தேவி...!

மானி: (தலைநிமிர்த்தி எழுந்திருந்து) வாரும் அமைச்சரே

குல; (இரக்கத்தோடு) இது என்ன கோலம், தாயே! ஊண், உறக்கமின்றி எந்நேரமும் இறைவன் முன்பு பழிகிடக்கின்றீர்களே!

மானி: (சோகச்சிரிப்புடன்) 'சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம், சுடச்சுட நோற்கிற் பவர்க்கு' என்ற திருக்குறள் நீர் அறியாததா? நாடும், என் நாதரும் மீண்டும் சைவராவதற்காக நான் மேற்கொண்ட நோன்பு இது.

குல; இந்த நோன்பு உங்கள் உயிரையே குடித்துவிடும் போலல்லவா இருக்கிறது? ஆனால் வேந்தரின் நெஞ்சமோ சமண முனிவர்களின் சரணங்களே தஞ்சம் என்று கிடக்கின்றது. இடிக்குந் துணையார் இன்றி அவர் அலமரல் அடைகின்றார். அவரின் அடிபற்றி நாடே சமண இருளில் மூழ்கிவிட்டது.

மானி; காலம் மாறும், 'அருகனே சரணம்' என்று கூறும் வாய் 'ஆலவாயனின் அடிகளைப் போற்றித் துதி பாடும் நாள் வெகு தொலைவில் இல்லை. கடந்த இரவு நான் ஒரு கனவு கண்டேன்.

குல. (ஆவலோடு) அந்தக் கனவு யாதோ?

மானி: சோழ நாட்டிலிருந்து பாலன் ஒருவன் எம்நாடு நோக்கி வருகின்றான். அவன் மேனியெல்லாம் வெண்ணீறு; மார்பிலே உருத்திராக்க மாலைகள். அவன் தனது திருவாய் மலர்ந்து சிவநாமத்தைக் கூறிவந்து ஆலவாய்க் கோயிலினுள்ளே புகுந்துவிடுகிறான். அங்கு என் நாதர் நிற்கின்றார். அவரது நெற்றியிலே தன் கைத்தளிரால் அவன் திருநீற்றினை இட்டபோது எங்கும் ஒரு பேரொளி தோன்றினாற் போன்றிருந்தது. அவ்வேளையிலே எனக்கு ஏற்பட்ட மகிழ்விற்கோர் அளவில்லை. கனவுகண்டு விழித்த நேரத்திலிருந்து என் நெஞ்சிலே சொல்லமுடியாததொரு பரவசநிலை ஏற்பட்டு வளர்கிறது.

குல: சரியான வேளையிற் பொருத்தமான கனவுதான் கண்டிருக்கிறீர்கள். சீர்காழியிலே திருஅவதாரஞ் செய்த ஞானசம்பந்தப் பெருமானே நீங்கள் கனவிலே கண்ட அந்தப் பாலகன். மூன்று வயதிலேயே 'அம்மே! அப்பா!' என்று அழுதரற்றி உமையம்மையின் திருமுலைப்பாலையுண்டு ஞானம்பெற்ற சீலர் அவர். இப்பொழுது அவர் திருமறைக்காட்டிலுள்ள திருமடத்தில் அப்பர் சுவாமிகளோடு தங்கியிருக்கிறார்.

மானி: (கண்களை மூடிப் பரவச நிலையிலிருந்து) இறைவனின் கருணையே கருணை. எமது நாட்டிற்கும் வேந்தர்க்கும் நல்வினைப்பயன் வந்தடுத்தது. குலச்சிறையாரே! உடனடியாகத் தூதுவரை அனுப்பி அவருக்கு இங்குள்ள நிலையை அறிவியும். அந்தப் பிள்ளையாரே எம்மை ஆளுடைய பிள்ளையார். அவர் வருகையால் சமணிருள் ஓட்டெடுத்தல் உறுதி.

குல: தங்கள் சித்தம் தேவி! இன்றே தூதுவரை அனுப்புவேன். (போகிறார்.)

மானி: அமைச்சரே!

குல: (திரும்பிவந்து) தேவி!

மானி நாம் சம்பந்தப்பிள்ளையாரிடம் தூதனுப்புவது அரசர்க்குத் தெரிதல் கூடாது. இவ்விடயத்தில் நீர் மிகக் கவனமாக இருத்தல் வேண்டும்.

குல: இதற்கு அவசியமில்லை, தேவி! எமது வழியிலே நாம் செல்வதற்குத் தயக்கமோ அச்சமோ எதற்கு? ஞானசம்பந்தப் பெருமானை ஆலவாய் வீதிகளில் மிகச் சிறப்பான வகையில் வரவேற்று விழா எடுப்பதை அரசரும் காணவேண்டும். அவர் வழிபாடியற்றும் குண்டர்களும் அறியவேண்டும்; அறிந்து வயிறு எரிய வேண்டும்.

**மானி:** குலச்சிறையாரே! நீர் பாண்டிய மன்னரின் அமைச்சர்; நான் அவரின் மனைவி. கடமையால் நீரும் உரிமையால் நானும் அவருக்கு ஆட்பட்டிருக்கின்றோம்; எங்கள் செயலால் அரசரின் மனம் நோகக்கூடாது. இதனை நான் அனுமதிக்கமாட்டேன்.

**குல:** தேவி! பரசமயம் புகுந்த தம்பியைச் சூலைநோய் பெறவைத்துத் திசை திருப்பினரே திலகவதியார்? அவர் பிறந்த சோழமண்ணில்தானே நீங்களும் பிறந்தீர்கள்? அறவழி விடுத்து மறவழி திரும்பிய அரசர்க்காய் அளவுமீறி இரங்குவது அழகன்று. அவர் தமது பிழையை உணர்ந்து வருந்தித் திருந்த நாம் வாய்ப்பளிக்கவேண்டும்.

**மானி:** (கம்பீரமாகத் தலைநிமிர்த்தி) சைவம் எனது பரம்பரை உரிமை, பெண்மையோ எனது பிறப்புரிமை; சைவம் எனது விழிகள். பெண்மையோ எனது உயிர்; கட்டிய கணவனு, கடவுளா என்ற வினு எழும்பொழுது, பெண்மை கணவனையே கண் கண்ட தெய்வமாக ஏற்கும். அமைச்சரே! எவ்வகையிலும் என் நாதரின் மனம் புண்படாமலே நாம் செயலாற்ற வேண்டும்.

**குல:** (கைகூப்பி வணங்கி) தாயே! நீங்கள் எல்லாம் அறிந்தவர். தங்கள் கட்டளைக்கு மாறுரைத்த என்னை மன்னியுங்கள். நான் அரசர்க்குத் தெரியாமலே தூதனுப்புகிறேன்.

திரை

## காட்சி ஐந்து

[திருமறைக் காட்டிலுள்ள திருமடத்தில் அடியார் சூழ்ந்திருக்க அவர்களின் நடுவே திருஞானசம்பந்தப் பெருமானும், அப்பர் சுவாமிகளும் அமர்ந்திருக்கிருர்கள்; அவர்களின் பக்கலிலே யாழோடு திருநீலகண்ட யாழ்ப் பாணஞர் அமர்ந்திருக்கின்ருர்.]

சம்பந்தப் பெருமானுக்கு இன்னும் பதினைந்து வயது பூர்த்தியாகவில்லை. பால்வடியும் அழகு முகம். அந்த அழகிற்கு அணிசெய்துகொண்டு நெற்றியிலே திருநீறு துலங்குகின்றது. எந்நேரமும் சிவசாந்நித்தியம் பெற்று அதனுல் முறுவல் மாருத பவள உதடுகள். அவற்றி னிடையே ஒளிகாலும் முத்துப் பற்கள். பாலமுருகனைப் போலக் கண்டதும் கைகூப்பித் தொழவேண்டும் என்பது போன்ற உணர்வைக் கிளப்பிவிடும் கம்பீரம் அந்தச் சிறிய திருவடிவிலே பொலிந்துகொண்டிருக்கிறது,

அவருக்கு முன்னுல் அமர்ந்துள்ள அப்பர் சுவாமிகள் எழுபது வயது கடந்த முதியவர். ஆனுல் அந்த முது மையை அவரிடத்தே காணக்கூடவில்லை. அறிவு சுடர் விடும் அகன்ற பெரிய விழிகள். உயர்ந்த நெற்றி. அதனை அழகு செய்யும் திரிபுண்டர நீற்றுக்குறி. முண்டிதஞ் செய்த தலை. பரந்த மார்பு அதனை அணி செய்யும் உருத்திராக்கமாலை. தோளைவிட்டு நீங்காது பொலியும் உழவாரத்திருப்படை. இவ்வாறு அப்பர் சைவத்திரு வோடு பொலிகின்ருர்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர்க்கு நடுத்தர வயது. சிவப்பழக் கோலம். திரை விலகுகையில் அவர் யாழைத் தமது மடியிலே வைத்துக்கொண்டு பயபத்தியோடு அமர்ந் திருக்கின்றார்.]

திருஞா: அப்பரே! தங்கள் வரலாறு கேட்கக் கேட்க உருக்கத்தை மிகுவிக்கிறது. புகழனாரும் மாதினி யாருமாகிய தங்கள் பெற்றோர் ஒருவர்பின் ஒருவராய் இறையடி சேர்ந்தார்கள், தமக்கையாராம் திலகவதி யாருக்கு மணம் பேசியிருந்த கலிப்பகையாரும் போர்க் களத்திலே வீர மரணம் எய்தினர். அதனால் துயருழந்த திலகவதியார் உங்களுக்காகத் தம் உயி ரைப் பிடித்துக்கொண்டு துறவியாய் வாழ்ந்தார்; திருவதிகை வீரட்டானத்திலே சிவத்தொண்டு செய் திருந்தார். உம்...அதன்பிறகு...

அப்பர்: (வேதனையோடு) அதன்பிறகுதான் எனது வாழ்க் கையின் இருள் நிறைந்த படலம் தொடங்குகின்றது. தமக்கையாரோ துறவியாகிவிட்டார். இளைஞனாகிய என்னைக் கட்டுப்படுத்தி வழிநடாத்த யாரும் இல் லாது போய்விட்டார்கள். சுதந்திரப் பறவையாய்த் திரிந்தேன். அக்காலத்தில் பல சமயங்களைப் பற்றி யும் ஆராய்வதே என் பொழுதுபோக்காய் இருந்தது.

திருஞா: சமயம் ஆராய்வதற்குரியதன்று; பின்பற்றற் குரியது என்று உங்களுக்குத் தோற்றவில்லையா? காரண காரிய ஆராய்வுகளாற் கடவுளைக் காணவிய லாது என்பதை நீங்கள் உணரவில்லையா?

அப்பர்: (கூச்சமும் நாணமும் மீதுர) பிள்ளையாரே! 'சிவ னடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்' பெற்ற தங்களைப் போன்றவனா நான்? உலகியல் அறிவே உயர்ந்ததெனக்கொண்டு, எனது மேதாவிலாசத்திலே நம்பிக்கை வைத்துக் கெட்டொழிந்துபோனேன். இன்னும் கேளுங்கள். "தன் செயலெல்லாம் தலைவன் செயலெனக்கொண்டு இறைவனிடமே அனைத்தையும்

அர்ப்பணித்து அவனை அம்மையாகவும், அப்பனுகவும், நண்பனுகவும், வழிகாட்டியாகவும் கொள்ளும் பத்தி நெறி எனக்கு அமைதி தரவில்லை."

**திருநீல:** (வியப்போடு) அப்படியா? அதுவும் நீங்களா? 'கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க் கொய்ம் மலர்ச்சே வடியிணையே குறுகிஞேமே' என்று குர லெடுத்த தாங்களா?

**அப்பர்:** (பெருமூச்சு விட்டு) அது ஒரு காலம். பக்கத்திலே இருந்த நீர்த்தடத்தைக் காணுது பேய்த்தேரை நீரென்று கருதி விடாய்கொண்டு அலைந்திட்டேன்; அந்த அலைச்சலிலே சிறிது காலம் சமணனுயும் வாழ்ந்தேன்;

**திருஞா:** அது தெரியும், 'மெய்யெல்லாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான் தாள்தொழாதே, உய்யலாம் என்றெண்ணி உறிதூக்கி யுழிதந்தென் உள்ளம் விட்டுக், கொய்யுலாம் மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலும் ஆரூராரைக், கையினுல் தொழாதொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே, என்று பாடியிருக்கிறீர்களே!

**அப்பர்:** (நாணத்தோடு) நம்பன் அருள் கிட்டாமையால் கொல்லாமை மறைந்து உறையும் சமணர் வசமாகி, அவர்களுக்குத் தலைவனுமாகித் தருமசேனனுனேன்;

**திருநீல:** 'கொல்லாமை மறைந்துறையும்' என்கிறீர்களே? சமணர்கள் பின்பற்றும் கொல்லாமை கூடப் போலி என்பது உங்கள் கருத்தா?

**அப்:** அதை ஏன் கேட்கின்றீர்கள்? நடந்து செல்கையில் ஒரு கிருமியைக் கூடக் கொல்லக்கூடாது என்று மயிற் பீலியாற் சிவிறிச் செல்வர். குடிக்கும் நீரிலும் உயிர் காக்கக் குண்டிகையிலே வடித்துப் பருகுவர். தலையிலுள்ள பேன், ஈர் முதலியவற்றையும் கொல்லாதிருக்கத் தம் தலை மயிரைப் பிடுங்கிச் சீழ்த் தலையராய் வாழ்வர், ஆனுல் சமயம் கிட்டும்போது இரத்த ஆற்

றையே ஓடவிடத் தயங்கார். அரசர்களைக் கையாட்க ளாக்கி, அதிகாரத் திமிரோடு அழிவிற்கு ஆராத்தி எடுப்பவர்கள் இந்தச் சமண வேடதாரிகள்.

**அப்:** (வியப்போடு) அத்துணைக் கொடியரா? நான் அனுபவத்தில் உணர்ந்த உண்மை இது. பல்லவ வேந்தனைக் கைப்பாவையாக்கி நாயேனுக்கு அவர் கள் தந்த தொல்லைகள் கொஞ்சமோ? எம்பெரு மான் திருவருளால் மலையென வந்த இடர்கள் பனி யென நீங்கின.

[இவ்வேளையில் அடியார் ஒருவர் வந்து சம்பந்தர் முன்பு கைகட்டி வாய்புதைத்து நிற்கின்றார்]

**திருஞா:** மெய்ப்பொருளாரே! என்ன செய்தி?

**மெய்:** பாண்டி நாட்டிலிருந்து வந்தவர்களாம். பாண்டி மாதேவியாலும், அமைச்சர் குலச்சிறையாராலும் அனுப்பப்பட்டவர்களாம், தங்களிடம், அவர்களின் செய்தியைச் சொல்ல வாயிலிலே காத்துநிற்கின் றனர். வரச்சொல்வதோ?

**சம்:** வரச்சொல்லும்.

[மெய்ப்பொருளார் சென்று தூதுவர்களை அனுப்புகின் றார்.]

**தூது:** [இருவரும் பிள்ளையாரின் திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்குகின்றனர்) காழியர் தவமே! கவுணி யர் தனமே! கலைஞானத் தாழிய கடலே! அதனிடை அமுதே! அடியார்முன் வாழிய வந்திம் மண்மிசைவா னோர் தனிநாதன், ஏழிசை மொழியார் தனதிருவருள் பெற்றுயர்ந்தோனே! அடியேங்களின் வணக்கத்தை ஏற்றருள்க.

**திருஞா:** சிவசிவ! எழுந்திருங்கள்.

[அவர்கள் எழுந்ததும் அவர்களின் நெற்றிகளைப் பார்க் கின்றார்]

திருஞா: அடடா உங்கள் நெற்றிகள் சமணரின் நெஞ்சங்கள் போலப் பாழ்பட்டுக் கிடக்கின்றனவே! விபூதி பூசுங்கள். (திருநீறு அளிக்கின்றார். தூதுவர் அதைப் பத்திசிரத்தையோடு பெற்றுச் 'சிவ சிவ' என்று கூறி அணிந்துகொள்கின்றனர்.)

தூது 1: அப்பாடா! இத்தனை நாளைக்குப் பிறகு விபூதி தரிக்கும்போது எவ்வளவு ஆனந்தமாய் இருக்கிறது. அதுவும் தங்கள் திருக்கரத்தாற் பெற்று அணியக் கிடைத்தது எமது பூர்வ புண்ணியந்தான்.

திருஞா: அப்பரே! நீர் சற்றுமுன் கூறிய சமண ஆதிக்கம் பாண்டிநாட்டிலே தலையெடுத்தது போலும்.

தூது 2: அதை ஏன் கேட்கின்றீர்கள்? அடிகளே! எமது நாட்டைச் சமண இருள் மூடிக்கொண்டது. அவர்களுக்கு எதிராக 'உம்' என்றால் சிறைவாசம். 'ஏன்' என்றால் வனவாசம் என்றாகிவிட்டது.

திருநீல: கொடுமை! கொடுமை! இறைவனையே மறுத்துரைக்கும் அந்தக் கொடும்பாவிகளுக்கு ஆலவாயின் வாயில்கள் எவ்வாறு திறந்தன?

தூது : அதைக் கூறத்தான் நாம் இங்கு வந்தோம். சில நாள்களின் முன்பு ஆனைமாமலைப் பகுதியிலே குழப்பம் என்ற செய்தி வந்தது. அதனை அடக்கச் சென்ற அரசர்...

அப்: சமணரின் வலையில் விழுந்தனர் போலும். பிள்ளையாரே! சமணர்கள் ஆனைமாமலையிலும், அடுத்துள்ள ஏழு மலைகளிலும் திரண்டு பாழிகளும், பள்ளிகளும் சமைத்து வாழ்கின்றனர் என்று முன்பொருமுறை சொன்னேனல்லவா? அவர்களின் நாவில் அமைந்த விடத்திற்குப் பாண்டியன் நல்லதோர் இரையாகிவிட்டான்.

திருநீல: சிவசிவ! கேட்கவே நாராசமாய் இருக்கிறது இந்தச் செய்தி.

**தூது 2:** சுவாமிகள் சொன்னது சரி. அரசர் நாடு திரும்பினார். அவரைத் தொடர்ந்து சமணரும் வந்தனர்.

**தூது 1:** தென்னவராம் எம் மன்னர் முன்செய்த தீவினை, சமணமாய் மூண்டெழுந்து தீந்தமிழ் நாட்டிடை வந்தது. அஹிம்சை பேசி, அன்பு கூறி, அறிவால் மயக்கி அமணர்கள் தலையெடுத்தனர்.

**தூது 2:** பூழியர் தமிழ்நாட்டுள்ள பொருவில்சீர்ப் பதிகளெல்லாம், பாழியும் அருகர் மேவும் பள்ளிகள் பலவுமாகிச் சூழிருட் குழுக்கள் போலத், தொடைமயிற் பீலியோடும், மூழிநீர் கையிற் பற்றி அமணரே யாகி மொய்ப்பார்.

[அங்கிருந்த அடியவர் கூட்டம் 'சிவ சிவ' என்று கூறிச் செவிகளைப் பொத்துகின்றது.]

**தூது 1:** பறிமயிர்த் தலையும், பாயும் பீலியும் தடுக்கு மேனிச் செறியு முக்குடையுமாகித் திரிபவராகிச் சீர் கெட்டது எம் பதி.

**தூது 2:** கன்னிநாடு அமணர் தம்மாற் கட்டழிந்து இழிந்தது. மன்னரும் அவர்கள் மாயத்து அழுந்தினர். தேவியாம் மானியாரும் திருநிறை அமைச்சரும் புகலி வேந்தர்க்கு 'இதனை இயம்புக' என்று எம்மை அனுப்பினர்.

**சம்:** (எழுந்து நின்று) காலம் வந்துவிட்டது. கன்னிநாடு சென்று தன் கடன் ஆற்றுமாறு இறைவன் பணிக்கின்றான். அப்பரே விடைகொடுங்கள்.

**அப்:** பிள்ளையாரே! அஸ்தி, நாஸ்தி பேசும் அமணர்கள் கொடியவர்கள். அவர்களின் வஞ்சனைக்கு ஓர் அளவில்லை. நான் உரைசெய்வது ஒன்றுண்டு. உங்கள் கோள்களும் தீயவாய் உள்ளன. எழுந்தருள உடம்படுவது ஒண்ணாது.

[சம்பந்தப் பெருமான் புன்னகையோடு ஒன்றும் பேசாது கண்களை மூடி நிற்கின்றார். திருநீலகண்ட யாழ்ப் பாணரும் தமது யாழைத் தோளிலே சாத்தியபடி எழுந்து நிற்கின்றார். பிள்ளையாரின் திருவாயிலிருந்து பதிகம் ஒன்று எழுதற்கான சூழ்நிலை உருவாவதை உணர்ந்த அடியார்களும் பயபத்தியோடு எழுந்து நிற்கின்றனர். அப்பர் பெருமானும் எழுந்து கரங்கூப்பி நிற்கின்றார். பிள்ளையார் உச்சிமேற் கூப்பிய கரத்தராய்த் திருமறைக் காட்டுக் கோயிலை நோக்கி நடக்கின்றார். யாவரும் பின் தொடர்கின்றனர். 'பின்னணியிலே 'வேயுறு தோளிபங் கன்' என்ற திருப்பதிகத்தின் பண் வாத்தியங்களில் இசைக்கப்படுகின்றது.]

திரை

## காட்சி ஆறு

திருமறைக்காட்டுத் திருத்தலக் கோபுரம் தோன்றுகின்றது. 'வேயுறு தோளிபங்கன்' பதிகத்திற்கான பண்ணிசை கம்பீரமாக வாசிக்கப்படுகின்றது. கோபுரம் மறைந்து சந்நிதி தோற்றுகின்றது. திருமறைக்காட்டீசரும், அம்மையாரும் தீபஜோதியிலே அருள் கனிந்து விளங்குகின்றனர். பிள்ளையாரும் அவரைத் தொடர்ந்து அப்பர், திருநீலகண்ட யாழ்ப்பாணனூர், தூதுவர், அடியார்கள் முதலியோரும் வந்து சந்நிதி முன்னுல் உச்சிமேற் கூப்பிய கரத்தரா நிற்கின்றனர். திருநீலகண்டர் யாழை மீட்டுகின்ருர். சம்பந்தப் பெருமான் பாடத் தொடங்குகின்ருர்.]

கோளறு திருப்பதிகம்

(திருச்சிற்றம்பலம்) பண்: பியந்தைக் காந்தாரம்

திருஞா: வேயுறு தோளிபங்கள் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனுல்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனுல்

ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டா
உடனாய நாள்கள் அவைதாம் [றும்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்க ளாலை விளைசெந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முக னாதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொன் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

[திருஞானசம்பந்தர். 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்லியவாறு கண்களைத் திறக்கின்றார். அடியார்கள் யாவரும் கண்ணீர் வார மெய்ம்மறந்து உச்சிமேற் கூப்பியகரத்தராய் நிற்கின்றனர். அப்பர் பெருமான் பிள்ளையாரைத் தழுவி உச்சி மோந்து குரல் தளதளக்கப் பேசுகின்றார்.]

அப்: பிள்ளையாரே! எனக்கு இன்றோடு எழுபத்திரண்டு வயதாகின்றது. எத்தனையோ நூல்களைக் கற்றிருக்கிறேன். நாளெல்லாம் 'நமச்சிவாய, நமச்சிவாய' என்று ஓதி வந்திருக்கிறேன். ஆனால் பதினைந்தே வயது நிரம்பியபாலராகிய உமது அநுபூதி எனக்குக் கிட்டவில்லை; 'எல்லாம் அவன் செயல் என்று இன்புற்று நின்று கடனாற்ற இன்னும் என்னால் இயலவில்லை. ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் பயன் என்ன? தான் அடங்காப் பேதையானேன். என்னை மன்னித்து என்னையுந் தங்களோடு அழைத்துச் செல்க.

திருஞா: (கரங்கூப்பி நின்று) தங்கள், யாத்திரை தொடரட்டும். இறைவன் அருளால் எல்லாம் இனிதே முடியும். விடைகொடுங்கள்.

அப்: (கரங்கூப்பியபடி) சென்று வருக. திருவருள் உம்மைக் காத்திடுக.

[பிள்ளையாரும், தூதுவரும் அடியவர் கூட்டமும் செல்கின்றனர்]

திரை

## * காட்சி ஏழு

[ஆலவாய்த் தலைமைப் பள்ளியின் முன் மண்டபம். சமண குருமார் தரையிலே வலமும், இடமுமாக இரு வரிசைகளில் அமர்ந்திருக்கின்றனர், நடுவிலுள்ள உயர் பீடமொன்றில் ஹேமச்சந்திரர் அமர்ந்திருக்கின்றார். அவருக்கு இடப்பாகத்திலே இடப்பட்டுள்ள பீடத்தில் மல்லிசேனர் இருக்கின்றார்.

அவர் முன்பு இளைஞராகிய குருமார் இருவர் தலை குனிந்து கைகளை முன்னாற் கட்டியபடி நிற்கின்றனர்,

மல்லிசேனரின் முகத்திலே கோபக்குறி. ஹேமச்சந்திரரோ வழக்கம்போல உணர்ச்சிகளுக்குத் திரையிட்ட முகத்தோடு அமர்ந்திருக்கின்றார்.]

ஹேம: பார்சுவநாதா! ஹரிபத்திரா! சமணத் துறவிகளின் கடும் விரதங்களுக்கு இந்த உலகமே அடிபணிந்து மதிப்புச் செலுத்துவது நீங்கள் அறியாததன்று. சமணத்துறவி ஒவ்வொருவனும் தனது

---

* இக்காட்சியமைப்பிற்கான ஆதாரங்கள், பெரியபுராணத்திலே, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்து 631 ஆம் பாடலிலிருந்து 642ஆம் பாடல் வரையுள்ள 12 பாடல்களினின்றும் எடுக்கப்பட்டன. சிறப்பாக

கந்தியார் தம்மிற்றுமே கனன்றெழு கலாங்கள் கொள்ள
வந்தவா றமணர் தம்மின் மாறுகொண் டுறு செய்ய
முந்தைய வுரையிற் கொண்ட பொறைமுத லவையும் விட்டுச்
சிந்தையிற் சென்ற முன்னந் தீக்குணந் தலைநின்றார்கள்

என்ற பாடலின் கருத்தே பெரிதும் கொள்ளப்பட்டது. (தி. ஞா. ச, மூ. புராணம் 634)

புலன்களைக் கடுமையாக அடக்கி, ஒடுக்கி வருத்தியே வாழவேண்டியவனுகின்றுன். தனது இன்னுயிரைப் போக்குவதுகூட அவனுக்கு இழுக்கன்று; பாவமும் அன்று. ஆனால் அஹிம்சை, பிரமசரியம், சத்தியம் அஸ்தேயம், அபரிஹ்ரகம் என்ற ஐந்தையும் அவன் தன் உயிர் நாடியாகப் பேணுதல் வேண்டும். நீங்கள் எமது பள்ளியிலே படித்த முதற்பாடம் இது. தெரியுமல்லவா?

[ஹரிபத்திரனும் பார்சுவநாதனும் பதில்பேசாது மௌனமாய் நிற்கின்றனர். மல்லிசேனர் பயங்கரமாய் விழித்து இடிக்குரலிற் பேசுகின்றுர்]

**மல்:** சொல்லுங்கள்; தெரியுமல்லவா? ஏன் மௌனஞ் சாதிக்கிறீர்கள்? துரோகிகளே! வாய்திறவுங்கள்.

**ஹேம:** (வாயிலே சுட்டுவிரலை வைத்து) மல்லிசேனரே! (மல்லிசேனர் அடங்குகிறுர்) பார்சுவநாதா! ஹரிபத்திரா! மீண்டும் கேட்கிறேன்; எமது பள்ளிவிதிகள், அவற்றின் கடுமை, அவற்றைப் பின்பற்றவேண்டிய அவசியம், இவை உங்களுக்குத் தெரியுமல்லவா?

**ஹரி + பார்:** (ஒரு குரலாக) தெரியும்.

**ஹே:** தெரிந்ததைப் பின்பற்றி ஒழுகவேண்டியதுதானே முறை?

**ஹரி + பார்:** ஆம்.

**ஹேம:** அப்படியானுல் நீங்கள் இருவீரும் இல்லறத்தார் போல மாறுவேடம் பூண்டு கணிகை காஞ்சனமாலையின் வீடு செல்லக் காரணம்? அங்கு ஆடல் பாடல்களில் ஈடுபடக் காரணம்? இளம்பெண்களோடு கூடிக் களியாட்டயரக் காரணம்?

(இருவரும் மீண்டும் மௌனஞ் சாதிக்கிறுர்கள்)

**மல்லி:** அவர்கள் பேசமாட்டார்கள். பேசுவதற்கு வாய் இல்லை. நட்ட நடுவீதியிலே விட்டுச் சவுக்கால் அடிக்கவேண்டும் இந்த நாய்களுக்கு.

**ஹேம:** மல்லிசேனரே! தன்னைத் தான் காக்கிற் சினங்காக்க. அவர்கள் பேசுவார்கள். பேசட்டும், சொல்லுங்கள். நீங்கள் செய்தது குற்றமல்லவா?

ஹரி: அது எங்கள் குற்றமன்று:

ஹேம: (ஏளனமாகச் சிரித்து) உங்கள் குற்றமில்லையா? வீதியிலே சென்ற உங்களை அந்தத் தாசிப்பெண்கள் இழுத்துச் சென்று பலவந்தம் செய்தார்களா என்ன? உங்கள் வெள்ளுடையைக் களைந்து' பட்டும் பீதாம் பரமும் அணிந்து, கனகமணிக் கண்டிகைகளும் பூட்டி விட்டார்களா?

பார்சு: அவர் சொன்னது வேறு' "நாங்கள் கணிகையர் வீடு சென்றது எங்கள் குற்றமன்று: எங்கள் இளமை யின் குற்றம்" என்று சொல்கிறார் ஹரிபத்திரர்
[எங்கும் சிரிப்பு: ஹேமச்சந்திரர் கையை அசைத்து அமைதியை உண்டாக்குகிறார்.]

மல்லி: இங்கு நீங்கள் மாத்திரந்தான் இளைஞர் என்ற எண்ணமோ?

ஹரி: அப்படிப் பார்சுவநாதர் சொல்லியிருந்தால் அது தப்புத்தான். (மல்லிசேனரைச் சுட்டிக்காட்டி) உங்களைப் பார்த்தால் இந்த அறுபது வயதிலும் இளை ஞர் போலத்தான் தோற்றுகின்றீர்கள்.
[மீண்டும் சிரிப்பு. மல்லிசேனரின் முகம் சிறுக்கின் றது.]

மல்லி: (பல்லை நெருமியபடி) 'யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால், சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

ஹரி: அறிவோடு, அநுபவமும் பேசுகிறது!

[மீண்டும் சிரிப்பு. மல்லிசேனர் வெகுளி கொள்ளல், ஹேமச்சந்திரர் அதனை அடக்கல்]

ஹேம: மல்லிசேனரே! நீர் வயதால் முதிர்ந்தவர், அநு பவசாலி. அறிவாளி. நாளை எனக்குப்பின் இவர் களுக்குத் தலைமை தாங்கி வழிகாட்டவேண்டியவர்: அத்தகைய நீர் அடிக்கடி உணர்ச்சிவசப்படுவது தகாது: தயைகூர்ந்து சற்றுப் பேசாதிரும்:

**மல்லி:** (அடங்கி ஒடுங்கி) சித்தம்.

**ஹேம:** ஹரிபத்திரா, பார்சுவநாதா! விரும்பியோ விரும்பாமலோ இந்தத் துறவிகள் கூட்டத்திலே சேர்ந்து விட்டீர்கள். துறவு விதிகளைக் கடைப்பிடிக்காது அவற்றைக் கைநெகிழ விடுவது குற்றமல்லவா? புலன்களை அடக்காது அவற்றைத் தறிகெட்டு ஓடவிட்டுப் பெரும் பாவிகளாகிவிட்டீர்கள்.

**ஹரி;** அடிகளே! நானும் பார்சுவநாதரும் ஏதோ அநாதைகளாய், உண்ண உணவின்றியோ, உடுக்க உடையின்றியோ உங்கள் பின்னால் துறவிகளாய் ஓடிவந்தவர்களல்ல. இந்த நகரத்திலேயே பெரும் பிரபுக்களாய் எங்கள் பெற்றோர் வாழ்கின்றனர். ஆடம்பர சுகபோகங்களிலே மிதந்து திரிந்த, இலட்சியப் பித்தர்கள் நாங்கள். இவையெல்லாம் உங்களுக்குத் தெரியும்.

**ஹேம:** தெரியும், அதற்கென்ன?

**ஹரி:** உங்களின் வாசாலகத்தையும், துறவுப் புனிதத்தையும் கண்டு மயங்கி உங்கள் பின்னால் ஓடிவந்தோம்; ஆனால் 'வெளியிலே நீங்கள் காட்டுகின்ற வாழ்வு வேறு. உள்ளே நடத்தும் வாழ்வு வேறு' என்று கண்டுகொண்டோம்;

**ஹேம:** (சிறிது கோபத்துடன்) ஹரிபத்திரா! உனது பேச்சு எல்லை மீறுகின்றது. எங்களில் என்ன குறை கண்டாய்? நீயும், உன் நண்பனும் பிழைவழியிற் சென்றதை மறைக்க எங்கள்மீது பழிபோடுகிறாய். நாங்கள் மனம், வாக்கு, காயம் என்ற மூன்றாலும் பரிசுத்தமானவர்கள்.

**பார்சு;** (பெரிதாய்ச் சிரிக்கிறான்)

**மல்லி:** (வெகுண்டு) நீ சிரிப்பதன் அர்த்தம்?

**பார்சு:** அர்த்தம்! மல்லிசேனரே! உமது மனச்சான்றைத் தொட்டுச் சொல்லும். நீர் முக்கரணங்களாலும் பரிசுத்தமானவரா? கண் ஒன்று காண, மனம் ஒன்று

எண்ண, வாய் ஒன்று சொல்ல, கை ஒன்று செய்ய நடிப்பு வாழ்வு வாழும் துறவிகளே! சொல்லுங்கள். நீங்கள் பரிசுத்தமானவர்களா?எம்மைத் தாங்குகின்ற இந்தத் தரை; கவிந்து நிற்கின்ற இந்தக் கூரை, சுமந்து நிற்கும் இந்தத் தூண்கள்; இவை வாய்களைப் பெற்றிருக்கவில்லை, அதனால் நீங்கள் தப்பிவிட்டீர்கள். (எங்கும் ஒரே அமைதி]

ஹரி: ஹேமச்சந்திர சுவாமிகளின் வாயும் அடைத்து விட்டதோ? ஏன் பேசாதிருக்கிறீர்கள்? வீதியிலே பெண்களைக் கண்டால் கண்ணை மூடுவதும், ஓடிச் சென்றொழிப்பதுமெல்லாம் பிரமசரியத்தின் புனிதத்தைக் காக்கவன்று; கண்ணிலே விலங்கிட்ட காரிகையரைக் கருத்திலே சிறைவைக்கின்ற தந்திரமே அது. என்பதை ஒப்புக்கொள்ளுங்கள்; சத்தியத்தின் திரையினுள்ளே அசத்தியத்திற்குக் கட்டியங்கூறுபவர்கள் நீங்கள் என்பதை உலகறிய ஏற்றுக்கொள்ளுங்கள்; பற்றின்மை என்பது பிறன்பொருளைப் பற்றுதற்கமைந்த சூழ்ச்சி, ஹிம்சையின் மாற்றுருவமே அஹிம்சை என்பதனை இனியாவது மறுக்காது ஒப்புக்கொள்ளுங்கள்.

[மல்லிசேனர் தமது அரையாடையினுள்ளே மறைத்து வைத்திருந்த குத்தீட்டியை உருவிக்கொண்டு பாய்கின்றார். ஹேமச்சந்திரர் எழுந்து அவரின் கையைப் பற்றி நிறுத்துகின்றார்]

ஹேம; (சாந்தமாக) கத்திக்கு இங்குவேலையில்லை. போம் உமது ஆசனத்தில் சென்றமரும்;

[மல்லிசேனர் சென்று ஆசனத்தில் அமர்கிறார் ஹேமச்சந்திரர் புன்னகை செய்தபடி ஹரிபத்திரனையும், பார்சுவநாதனையும் அணுகிவந்து அவர்களின் தோள்களை ஆதரவோடு பற்றி அன்புகனியப் பேசுகின்றார்]

ஹேம: பிழைவிடுதல் மனித இயல்பு. நாம் என்ன தீர்த்தங்கரர்களா? சரி, சரி, நடந்ததை மறந்துவிடுங்கள்; எல்லோரும் சென்று அருக வணக்கத்தை முடித்து உணவருந்தச் செல்லுங்கள். போங்கள்.
[யாவரும் செல்கின்றனர்]

ஹேம: மல்லிசேனரே! சற்று நில்லுங்கள் உங்களோடு சில விஷயங்கள் பேசவேண்டும்;

[மல்லிசேனர் நிற்கின்றார்; மற்றவர்கள் யாவரும் போகிறார்கள். ஆழ்ந்த யோசனையோடு ஹேமச்சந்திரர் அங்கும் இங்கும் உலாவுகின்றார்.]

ஹேம: மல்லிசேனரே! எம்மை நோக்கிப் பேராபத்து நெருங்கி வருகின்றது.

மல்லி: (அச்சத்துடன்) அது என்ன? எனக்குச் சொல்லவே இல்லையே!

ஹேம: (சிந்தனையோடு அங்கும் இங்கும் உலாவுகிறார்) நேற்றிரவு ஒரு கனவு கண்டேன். 'மழவிடை இளங்கன்றொன்று வந்து நம் கழகந்தன்னை உளறிடச் சிதறி' ஓடுகிறது. அதனை ஒருவராலும் தடுத்தல்கூடவில்லை. நாங்களெல்லாம் அஞ்சி ஓடுகின்றோம். புகலிடமே கிடைக்காத நிலையில் நிழல் இல்லா மரங்களில் நாங்கள் ஏறி அமர்ந்து கொள்கின்றோம்;

மல்: (பயத்தோடு) நிழல் இல்லா மரம்... அது கழுமரம் அல்லவா? ஐயையோ!

ஹேம: இது கனவு. ஆனால் நேரிலே நடந்த உற்பாதங்களைக் கேட்டால் உமது நெஞ்சமே நின்றுவிடும்.

மல்லி: அப்படியா?

ஹேம: நேற்றுக் கடையாம நேரத்திலே கனவு கண்டு வியர்க்க விறுவிறுக்க எழுந்து வெளியே வந்தேன்; பாழியின்மேலும், அசோகின்மீதும் அமர்ந்து மயில்கள் எம்மிடம் உணவேற்பது வழக்கமல்லவா? அவ்விடங்களிலே கூகையும் ஆந்தையும் இருந்து அவலக்

குரலோச்சின. எனது நெஞ்சக் குருத்தே கருகிவிட்டதுபோல இருந்தது.

மல்: அது மிகப்பெரிய அபசகுனமாயிற்றே! உம்... அப்புறம்?

ஹேம: நேற்றுக் காலை முழுவதும் நீரும், சீடர்களும் பிச்சையேற்க வெளியே சென்றிருந்தீர்கள். நான் தலைவலி என்று பள்ளியிலே தங்கியிருந்தேன். அந்த வேளையில் எட்டு மலைகளிலும் உள்ள பாழிகளிலே வதியும் சமண குருமார் என்னைத் தேடி வந்தனர். பேயறைந்த முகமும் விழி நிறைந்த நீருமாய் அவர்கள் காட்சி தந்தனர்.

மல்: காரணம்...?

ஹேம: அதை விசாரித்தேன். அந்த வேளையில் அச்சத்தால் அவர்களின் பீலியும், தடுக்கும், பாயும் தவறிக் கீழே விழுந்தன. கால்கள் தடுமாறின. கண்கள் இடம் துடித்தன. எனக்குந்தான்!

மல்: (மிகுந்த வேதனையுடன்) எங்கள் இன்ப வாழ்வு தொலையுங் காலம் அண்மிற்றுப் போலும். இங்கோ எம்முள்ளேயே கலகம் விளைந்துவிட்டது.

ஹேம: (வேதனைச் சிரிப்புச் சிரித்து) ஆனைமாமலைப் பாழியினருகே நின்ற அசோக மரம் வேரோடும் பாறி விழுந்துவிட்டதாம்.

மல்: ஆ... (மலைத்து நிற்கிறார்)

ஹேம: இந்தச் செய்தியைச் சமண குருமார் சொன்னபோது எனது உயிரே கழன்றது போன்றிருந்தது. இப்போது நினைத்தாலும் நெஞ்சம் நடுங்குகின்றது. இது எம்மை எங்கே கொண்டு சென்றுவிடுமோ? [மேலே கையைத் தூக்கி வணங்குகின்ற பாவனையில்] அந்த அருகனே அறிவான்.

[இரு சமண குருமார் பதைபதைப்போடு ஓடிவருகின்றனர்]

ஹேம: நீங்கள் என்ன செய்தி கொண்டு வருகிறீர்கள்?

[இருவரும் ஓடிவந்த களைப்பால் பேசமுடியாது நிற்கின்றனர்]

ஹேம: (படபடப்போடு) சித்தசேனு! நாரதா! என்ன நடந்தது? சொல்லுங்கள்.

சித்; என்ன சொல்வோம், சுவாமி! சோழநாட்டவனும் சீர்காழியிற் பிறந்தவனும்; சிவபெருமான் அருள் பெற்றவனும். மூன்று வயதிலேயே ஞானம்பெற்றுப் பாசுரம் பாடியவனும், திருஞானசம்பந்தன் என்று பெயர்.

[ஹேமச்சந்திரரும் மல்லிசேனரும் "கேட்டு முட்டு, கேட்டு முட்டு" என்று கூறிச் செவிகளைப் பொத்துகின்றனர்]

மல்; அவனுக்கு என்ன?

நார; பதினைந்து வயதிருக்கும்; பாலொழுகுகிறது அவன் முகத்தில்; அதை நாள் முழுதும் பார்த்திருக்கலாம்; அத்தனை அழகு!

[மல்லிசேனர் கோபத்தோடு நாரதரின் கன்னத்தில் அறைகின்றார்]

மல்: முட்டாளே! அவனைப் புகழ உனக்கு அத்துணைத் திமிரா?

நார: (பரிதாபத்தோடு கன்னத்தைத் தடவியபடி) கண்டதைச் சொன்னேன்; (கண்களை மூடியபடி) கண்டு முட்டு! கண்டு முட்டு!

ஹேம: உம்....அப்புறம்.

சித்: அவன் முத்துச் சிவிகை ஏறி நாதகீதங்கள் முழங்க அடியார் கூட்டம் சூழ்ந்துவர, ஆலவாய்க் கோயிலை நோக்கி வந்துகொண்டிருக்கிறான். அவனை வரவேற்கக் குலச்சிறையாரும், பாண்டிமாதேவியும் தங்கள் பரிவாரங்களோடு கோயிலை நோக்கிச் செல்கிறார்கள்.

ஹேம: (வழக்கத்திற்கு மாறாக வெகுளிகொண்டு பல்லை நெருமியபடி) ஆ. !நான் நினைத்தது நடந்துவிட்டது. நான் கனவிற்கண்ட மழவிடை இளங்கன்று இவன் தான். இந்தச்சிறுவன்தான். இவனைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். சீர்காழியிலே பார்ப்பனனின்

மகனுகப் பிறந்து, பரமனின் தேவியால் பாலூட்டப் பட்டவன் என்று சொல்கிறுர்கள், பரமனுவது தேவியாவது! முட்டாள்கள்.

இவன் இசையிலும், தமிழிலும் வல்லவன், மந்திர தந்திரங்களும் தெரிந்தவனுக இருக்கலாம். எமக்கு இவனே பெரும் பகைவன்.

**மல்:** இவனே உடனே தொலேக்கவேண்டும். குருவே! விடை கொடுங்கள். எனது சீடரோடு சென்று அவனேத் தொலேத்து வருகின்றேன். (புறப்படுகிறுர். ஹேமச் சந்திரர் அவரை இழுத்து நிறுத்துகிறுர்)

**ஹேம:** நில்லும்...அது அவ்வளவு எளிதன்று. அவ்வாறு நிகழ்த்துவீராயின் நாட்டுமக்களே எம்மைப் பூண் டோடு அழித்துவிடுவர். நில்லும்.

[மல்லிசேனர் மலேத்துநிற்கின்றுர். ஹேமச்சந்திரர் சித்த சேனரையும், நாரதரையும் செல்லுமாறு கையசைத் துவிட்டு, சிந்தனேயோடு அங்கும் இங்கும் நடக்கிறுர்]

**ஹேம:** (திடீரென்று நின்று) ஆம், அதுவே வழி.

**மல்:** (ஆவலோடு) அது என்ன?

**ஹேம:** மல்லிசேனரே! நேராய் நீர் ஆலவாய்ச் சைவமடத் திற்குச் சென்று அங்கே ஒருபக்கலில் ஒளித்திரும். இன்னும் சிறிது வேளேயில் அந்தச் சிறுவனும், பரிவா ரங்களும் அங்கு வந்து உணவுண்டு இளேப்பாறுவர். அப்போது நீர் உமது மந்திரோச்சாடனத்தால் அந்த மடத்திலே தீப்பற்றி எரியச்செய்யும். சிறிது பொழு தில் மடமும், அந்த மடையர்களும் பஸ்மீகரமாகி விடுவர்.

**மல்லி:** (ஐயத்தோடு) மாறன் இதனே அறிந்தால்......?

**ஹேம:** அஞ்சாதேயும். அவன் எடுப்பார் கைப்பிள்ளே. அவன் மனத்தை மாற்றுவது என் பொறுப்பு. இப் பொழுது நேரே என் சீடரையும் அழைத்துக்கொண்டு அவனிடந்தான் செல்லப்போகிறேன்.

திரை

## காட்சி எட்டு

[ஆலவாய்க் கோயிலின் முன்மண்டபம்; மூலஸ்தானம் இருண்டு கிடக்கின்றது. வெளியே ஓரிரு தீபங்கள் எரிந்துகொண்டிருக்கின்றன. மங்கலான அந்தத் தீப ஒளியில் மானியும், அவள் தோழிகளான கயற்கண்ணி, அல்லி, தேன்மொழி ஆகியோரும் நிற்பது நிழல் உருவங்கள்போலத் தெரிகின்றது.]

**மானி:** (வேதனையோடு) வீதியெல்லாம் தோரணம் தூக்கி பூச்சரங்களை அணிபெறக் கட்டி, கமுகும் வாழையும் கவினுற நாட்டி, செவ்விளநீர்க் குலைகள் தொங்கவிட்டுப், பூரண கும்பம் பொலிவாக முன்வைத்து, சைவத்தின் தவத்திருவை "வருக, வருக," என்று வரவேற்க வேண்டிய வேளையிலே, அவர் வருகைக்காக இந்த இருளோடு இருளாகக் காத்துநிற்க வேண்டியிருக்கிறது! இதுவும் இறைவன் திருவிளையாடல்போலும்;

**தேன்:** கலங்காதீர்கள் தேவி! எமது நாட்டைச் சூழ்ந்த இருளைப் போக்கிட ஞானசூரியன் உதித்திட்டான், என்று மகிழவேண்டிய வேளையல்லவா இது? சம்பந்தரின் வருகையால் இருளும் ஒளியாகும்; வனமும் பொழிலாகும். எங்கும் சைவத் திருக்கோலம் மீண்டும் பொலிந்திடும். இருந்துபாருங்கள்,

[அவ்வேளையில் வெகு தூரத்திலிருந்து சம்பந்தப்பிள்ளையாரை வரவேற்றுப் பாடும் பாடல் ஒலி கேட்கின்றது. அது படிப்படியாக ஒலிகூடிச் சமீபித்து வருவதை அறிவுறுத்துகின்றது. மானியும், தோழியரும் குரல் வரும் திக்கையே நோக்கி உச்சிமேற்கூப்பிய கரத்தராய் நிற்கின்றனர்]

மறைவளர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்[வித்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்
துறைபெறு மணியே சுருதியின் ஒளியே வெளியேவந்
திறையவன் உமையாள் உடனருள்தர வெய்தினை
நீயே

புண்ணிய முதலே புனைமணி அரைஞா ணொடுபோதும்
கண்ணிறை கதிரே கலைவளர் மதியே கவின்மேவும்
பண்ணியல் கதியே பருவம தொருமூ வருடத்தே
எண்ணிய பொருளாய் நின்றவர் அருள்பெற்
றனைநீயே;

[இப்பொழுது கோயிலின் வெளியே 'அரஹர மகா தேவ!' என்ற கோஷம் எழுந்து வாயிலை அணுகுகிறது: மானி முதலியோர் முகம் மலர வாயிலை நோக்குகின்றனர்] முதலிலே குலச்சிறையாரும், அவரைத் தொடர்ந்து சம் பந்தப்பெருமானும், பின்னால் திருநீலகண்டயாழ்ப்பாண ரும், அடியார்களும் வருகின்றனர். சந்நிதானத்தின் முன்பு வந்ததும் யாவரும் ஒருசில கணங்கள் கண்மூடி நின்று தியானிக்கின்றனர். தியானம் முடிந்து பிள்ளை யார் கண்களைத்திறக்க மானி, தோழிகள்தொடர்ந்துவரச் சென்று பிள்ளையாரின் காலடிகளிலே விழுந்து வணங்கு கிருள்]

**மானி:** ஞானத்தின் திருஉருவே! நான்மறையின் தனித் துணையே! வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்தே! தேனக்க மலர்க்கொன்றைச் செஞ் சடையார் சீர்தொடுக்கும் கானத்தின் எழுபிறப்பே! உம்மை எம் கண்பனிப்பக் கண்டிட்டோம். அடியே னும், அடியேனின் பதியும் செய்த தவம் அளப்பரிது.

**குல:** (சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தவண்ணம்) ஞானபீடமே! சென்ற காலத்தின் பழுதிலாத் திற மும், இனி எதிர்காலத்தின் சிறப்பும், இன்றெழுந் தருளப்பெற்ற பேறிதனால் எற்றைக்கும் திருவருள் உடையோம்; நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்

நற்றமிழ் வேந்தனும் உய்யும் நாள் அடுத்தது: வென்றிகொள் திருநீற்றின் ஒளியினில் இந்நாடு விளங்கிடும் வேளை வந்தது.

[வீழ்ந்து வணங்கிய இருவரையும் தூக்கியெடுத்து அவர்கள் நெற்றிகளிலே திருநீற்றினைப் பூசி, தேன்மொழி முதலியோர்க்கும் திருநீற்றினை வழங்குகின்றார்]

சம்: இந்நாட்டிலே பிடித்த கலி இன்றுடன் நீங்கியது என்று எண்ணுங்கள். ஆலமுண்ட நீலகண்டன் எம்மையெல்லாம் காத்திடுவன். (மூலஸ்தானத்தை நோக்குகின்றார்) இது என்ன? சொக்கநாதன் அங்கயற்கண்ணியோடு இருளிடத்தே கிடக்கின்றானே: (குரல் தளதளக்க) இந்தக் கோரக் காட்சியைக் காணவா கண்களைத் தந்தான். அருச்சகர் எங்கே?

மாணி; சமணர்க்கு ஆட்பட்ட மன்னர் இங்குப் பூசைபுரிய அருச்சகர்களை அநுமதிப்பதில்லை. கோயிலினுள் அடியேனும், அடியேனின் தோழியரும், குலச்சிறையாருமன்றி வேறு யாரும் வர இயலாது, இவ்விடத்தே காலையும், மாலையும் விளக்கேற்றும் பணியே, எனக்கு என் நாதர் அருளிய பெரும் பாக்கியம்.

சம்: (முறுவல் பூர்த்து) சோமசுந்தரன் தனக்கு விளக்கேற்றச் சரியான ஆளைத்தான் தேடிப் பிடித்தான். நன்று.

[தொடர்ந்து பிள்ளையார் கண்களை மூடித் தியானத்திலே ஆழ்கின்றார். பின் கண்களைத் திறந்து 'திருச்சிற்றம்பலம்' எனச் செபித்துவிட்டுப் பாடத் தொடங்குகின்றார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழ் வாசிக்கின்றார்]

திருவாலவாய்த் திருப்பதிகம்

சம்; பண்: புறநீர்மை

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தொறும் பரவப்

பொங்கழல் உருவன் பூதநா யகனால்
　　வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
　　ஆலவா யாவதும் இதுவே.

வெற்றவே யடியார் அடிமிசை வீழும்
　　விருப்பினன் வெள்ளைநீ றணியும்
கொற்றவன் தனக்கு மந்திரி யாய
　　குலச்சிறை குலாவிநின் றேத்தும்
ஒற்றைவெள் விடையன் உம்பரார் தலைவன்
　　உலகினில் இயற்கையை ஒழித்திட்(டு)
அற்றவர்க் கற்ற சிவனுறை கின்ற
　　ஆலவா யாவதும் இதுவே.

[எல்லையற்ற கூச்சத்தோடும், அச்சத்தோடும், மானியும், குலச்சிறையும் சம்பந்தப் பெருமானின் திருவடிகளில் வீழ் கின்றனர்]

**மானி:** ஞானத் தவக்கொழுந்தே! ஒன்றுக்கும் பற்றாத சிறியேனை இவ்வாறெல்லாம் புகழ்வதா? வாக்கெல் லாம் பெம்மானுக்காக்கிய தாங்கள் கேவலம் மனி தப் புழுக்களாகிய எங்களை இத்துணை உயர்த்திப் பதி கத்திலே வாழவைப்பதா?

**குலச்:** ஐயையோ! பெருமானே! இது என்ன சோதனை? நான் வெறும் தூசு. என்பொருட்டுத் தங்கள் தெய் வத் தமிழ் இறங்கி வருவதா?

**திருஞா:** (பரிவோடு) பரசமய வெள்ளத்தைப் பாண்டி நாட்டிலே தனிநின்று தடுத்து நிறுத்திய உங்களை எவ் வாறு புகழினும் தகும். மானி! இனி உன் பெயர் மங் கையர்க்கரசியாகவே நின்று நிலவட்டும்; சைவத் தமி ழுலகம் உன்னை அந்தப் பெயராலேயே நினைவு கூரட் டும். எழுந்திருங்கள். குலச்சிறையாரே! எங்களைத் திருமடத்திற்கு அழைத்துச் செல்லும். மங்கையர்க் கரசி! நீயும் தோழிகளும் அரண்மனை செல்லுங்கள்.

[குலச்சிறையார் கைகட்டி வாய்பொத்திநின்று வழிகாட் டச் சம்பந்தரும், சிவனடியாரும் அவரைத் தொடர்ந்து செல்கின்றனர்; மங்கையர்க்கரசியாம் மானியும், தோழி யரும் மற்றை வழியால் அரண்மனையை நோக்கி நடக்கின் றனர்]



திரை

## காட்சி ஒன்பது

*[ஆலவாய்த் திருமடத்தில், திருமறைக்காட்டிலிருந்து வந்த சிவனடியார்கள் ஆங்காங்கே படுத்து நித்திரை செய்கின்றனர். தூண்டாமணி விளக்கொன்று நடுவில் எரிந்துகொண்டிருக்கின்றது ஒருபக்கத்தில் திருஞானசம்தப் பெருமானும், திருநீலகண்ட யாழ்ப்பாணரும் உரையாடிக்கொண்டிருக்கின்றனர்.]*

திருநீல: சரியாகப் பத்து ஆண்டுகளுக்கு முன் ஒருமுறை இந்த ஆலவாய்க்கு வந்திருக்கிறேன். அக்காலத்தில் எந்நேரமும் நகரம் விழாக்கோலம் பூண்டிருக்கும். இசையரங்குகள், நாடக மன்றங்கள், பட்டிமன்றங்கள் என்று ஒரே கலைமயந்தான்: எங்குப் பார்த்தாலும் சிவனடியார்களே காட்சிதந்த காலம் அது. வீபூதி அணிசெய்யாத நெற்றி அன்று மருந்துக்கும் கிடைக்காது. இன்றோ எல்லா இடங்களிலும் பாழிகளும், பள்ளிகளும் நிறைந்து கிடக்கின்றன. ஆலவாய் என்ற பெண்மணி கைமைக்கோலம் பூண்டிருப்பதுபோல இருக்கிறது.

திருஞா: யாழ்ப்பாணரே! உமது வாயிலே இந்த அவச்சொல் வரக்கூடாது: யோகத்திலே அமர்ந்துள்ள சிவனை அடைய, உமையம்மை தவக்கோலம் பூண்டு விளங்குவதாக நினையும். காலம் மாறும்: அவன் அருள் இருப்பின் நாடு மிக விரைவில் கல்யாணக்கோலம் கொண்டுவிடும்.

[இவ்வேளையில் கொள்ளிக்கட்டை ஒன்றை ஏந்திய வண்ணம் மெய்ப்பொருளார் பதற்றத்தோடு 'பிள்ளைப்பெருமானே! இந்த அநியாயத்தைப் பாருங்கள்' என்று கத்தியவண்ணம் உள்நுழைகின்றார்]

திருஞா; உஷ்! இரையாதீர். சிவனடியார்கள் நடந்த களைப்பில் அயர்ந்து தூங்குவது தெரியவில்லையா?

மெய்: மன்னியுங்கள் சுவாமி! யாரோ ஒரு பேடிப்பயல் முகத்தைத் துணியால் மூடி மறைத்தவண்ணம் வந்து, மடத்திற்குத் தீவைத்தான். கையும் களவுமாக அவனைப் பிடிக்க எண்ணினால், அவன் கொள்ளியை எறிந்துவிட்டு ஓடித் தப்பிவிட்டான். எரிய இருந்த கூரை நெருப்பை அணைத்துவிட்டு, அவன் எறிந்த கொள்ளிக்கட்டையுடன் வந்தேன்.

திருநீல! சிவ சிவ! சொக்கனின் நாட்டிலே அக்கிரமமா?

திரு: (கண்களை மூடிக் கரங்குவித்துத் தியானிக்கிறார்)

[மெய்ப்பொருளாரும்; திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவரையே நோக்குகின்றனர்.]

திரை

## காட்சி பத்து

[மாறனின் படுக்கையறை. பலகணியின் ஊடாக நிலவின் ஒளிக்கதிர்கள் உள்ளே வந்து பட்டுத் தெறிக்கின்றன. பலகணிகளின் கம்பிகளைச் சுற்றிப் படர்ந்திருந்த முல்லைக்கொடிகள் மலர்வாய் திறந்து குலுக் என்று நகைக்கின்றன, நீண்டு தொங்கும் தூண்டாமணி விளக்கில் சுடர் எழுந்து காற்றின் சலனத்தால் மன்னவன் நெஞ்சம் போல் ஆடி அலைந்துகொண்டிருக்கிறது. மலர் தூவிய மஞ்சத்திலே தன்னந்தனியனாகப் பாண்டியன் அமர்ந்திருக்கிறான், அவன் உள்ளத்திலே பல்வேறு சிந்தனையோட்டங்கள்; அவை அவனது முகத்தையும் ஆக்கிரமிக்கின்றன.

எழுந்து உலாவுகிறான்; பின்னர் நின்று தன்னுள்ளே பேசிக்கொள்கிறான்]

மாற: இந்த உலகம் துன்பங்களால் நிறைந்திருக்கிறது. இளமை, செல்வம், யாக்கை என்பன நிலையற்றவை. வானத்திலே பல உருவும் காட்டி மறைகின்ற மேகக் கூட்டங்கள் போன்றவைதாம் இந்த வாழ்க்கை இன்பங்கள். அழகு என்பது என்ன? வெறும் கண் மாயம்; தசை, நரம்பு, எலும்பு, குருதி முதலாந் தாதுக்கள் போர்த்து மூடிய வெறுந் துருத்திதான் இந்த உடல். இதற்கு ஆடை...அணிகள்...அலங்காரம். சே! இதைவிடப் பேதைமை என்ன? ஹேமச் சந்திர சுவாமிகள் சொன்னவை யாவும் உண்மை தான். சந்தேகம் இல்லை;

[அந்தப்புரத்தின் வேருெரு பகுதியிலிருந்து வீணையின் கம்பீர நாதம் எழுகின்றது. அதிலே லயித்துப்போய்ப் பாண்டியன் மெய்ம்மறந்து நிற்கிருன்.]

மாற: ஆஹா! சாதாரிப் பண்ணை எவ்வளவு இனிமையாக வாசிக்கிருள்? தேன்மொழியாகத்தான் இருக்க வேண்டும். எனது நரம்புகள் யாவும் இளகுகின்றன; எனது உடலே உருகி ஒடுவதுபோல இருக்கின்றது. நெஞ்சிலே சொல்லொணுத பரவசம். எனது உயிரே இந்த நாதவெள்ளத்தில் அமிழ்ந்துபோய்த் திணறித் தத்தளிக்கின்றது. இது தெய்வீக இசைதான். சந்தேகமில்லை.

[கண்மூடி நிற்கிருன். திடீரென்று விழிகளைத் திறக்கின்ருன். மனம் மாறுகிறது. வெறுப்பால் முகத்தைச் சுழிக்கின்ருன்]

மாற: தெய்விக இசையா? தெய்வமாவது...இசையாவது...சேச்சே! நான் பலவீனனுகிவிட்டேன். பயங்கரமான கனவுபோல மறக்கநினைக்கும் எனது கடந்த காலம் திரும்பப் பார்க்கிறது. கூடாது...கூடவே கூடாது. இசை இச்சையைப் பெருக்கும். நாடகம் உணர்வைச் சீரழிக்கும்...பற்றை வளர்க்கும்...காமபரவசப்படுத்தும்...இக்காரணங்களால் தானே நாடெங்கும் நாடக அரங்குகளோ, இசை அரங்குகளோ இருத்தல் கூடாது என்று கட்டளை பிறப்பித்தேன்? அதையும் மீறி எனது அந்தப்புரத்திலேயே இசையரங்கா? தேன்மொழிக்கு எவ்வளவு துணிச்சல் இருக்கவேண்டும்? எல்லாம் இந்த மானி கொடுக்கும் இடம்.

[பக்கத்தில் இருக்கும் சேமக்கலத்திலே தட்டுகிருன். பணிப்பெண் ஒருத்தி ஓடி வருகின்ருள்.]

பணி: அரசே!

மாற: (கடுமையாக) வீணை வாசிக்கும் பெண்ணை உடனே நிறுத்தச்சொல். இனி என்ருவது அவள் வீணை வாசிப்பாளாயின் கழுவிலே ஏற்றிவிடுவேன் என்று கூறு. போ.

[பணிப்பெண் பயத்தோடு ஓடிமறைகிறுள். சிறிது பொழுதில் வீணையிசை நிற்கின்றது. அரசன் மஞ்சத்தின் அருகில் இருக்கும் பீடத்தை நோக்கிச் செல்கிறுன். அங்கே வெள்ளிப் பேழை ஒன்று இருக்கிறது. அதனுள் கையை வைக்கின்றுன்.]

மாற: (சிரிப்போடு) விபூதி! (பழக்கங்காரணமாக விபூதியை எடுத்து நெற்றியருகே கொண்டுபோகின்றுன்: அவன் மானிக்கு முன்பு சொன்னவை நினைவில் வருகின்றன)

பின்னணி வசனம்: அதை மாத்திரமா இகழ்கின்றேன்? அதைப் பூசியிருக்கும் யாரையும் எனக்குப் பிடிக்காது; ஏன் உன்னையும் கூடத்தான்; விபூதி என்பது என்ன? கேவலம், பசுவின் சாணத்தை எரித்தெடுத்த சாம்பர். மதியிலிகள் அதற்கு மகத்துவம் கொடுத்துவிட்டார்கள். நான் கூட இதுநாள்வரை மடையனுக இருந்துவிட்டேன். இனி அதைத் திரும்பியும் பார்க்க மாட்டேன்: எல்லாம் வெறும் குருட்டு நம்பிக்கை, வடித்தெடுத்த முட்டாள்தனம்; சே!

மாற: (வெறுப்புடன்) சே! (திருநீற்றுப் பேழையை எடுத்து எறியச் செல்கின்றுன். அப்பொழுது அவன் உடலில் மாற்றம் காண்கிறது. விறுவிறென்று அவன் உடலிலே சிவப்பேறுகின்றது.)

[அவன் துடிதுடித்துப் போகின்றுன். எங்கோ தொலை தூரத்தில் மிக மெல்லிதாக ஒரு பாடலின் ஓசை கேட்கின்றது.]

பாட்டு பண்: கௌசிகம்

செய்யனே திரு ஆலவாய் மேவிய
ஐயனே அஞ்சல் என்றருள் செய்யெனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பையவேசென்று பாண்டியற் காகவே;
சித்த னேதிரு ஆலவாய் மேவிய
அத்த னேயஞ்ச......

மாற: (விபூதிப் பேழையை வைத்துவிட்டு) ஆ...ஐயோ! அப்பா எனது உடல் பற்றி எரிகின்றதே! ஆ...... ஐயோ!......அப்... (பல்லை இறுக்கி) எரிவைப் பொறுத்துக்கொள்ள முயல்கிறான்; முடியவில்லை. படுக்கையிலே விழுந்து கதறிக்கொண்டே அங்கும் இங்கும் உருள்கிறான். மானி பாற்கிண்ணத்தோடு வந்தவள் அதனைப்பீடத்திலே வைத்துவிட்டுப் பதற்றத்தோடு மாறன் அருகே சென்று அவன் உடலைத் தடவுகின்றாள்]

மானி: அரசே! தங்களுக்கு என்ன நேர்ந்தது? ஏன் இப்படித் துடிக்கின்றீர்கள்? உங்கள் உடல் ஏன் இப்படித் தணலாய் எரிகின்றது?

மாற: (சேமக்கலத்தின் அருகிற் சென்றபடி) இதோ அரண்மனை மருத்துவரை அழைக்கின்றேன்.

மாற: வேண்டாம்; வேண்டாம். இது மருந்தாலே தீராது. உடனே ஹேமச்சந்திர சுவாமிகளை அழை. அவர் மந்திர தந்திரங்களில் வல்லவர். அவரால்தான் இது நீங்கும்... ஆ...

[எழுந்து அங்கும் இங்கும் வேதனையோடு உலாவுகின்றான்; பின் இருக்கின்றான்; எழுகின்றான். மானி சேமக்கலத்தில் தட்ட ஏவற்பெண் வருகிறாள்.]

ஏவற்: தேவி!

மானி: ஓடிச்சென்று தலைமை ஏவலனை ஹேமச்சந்திரரிடம் அனுப்பு. அவரைக் கையோடு அழைத்து வரச் சொல். ஓடு.
(பணிப்பெண் ஓடுகிறாள்)

திரை

## காட்சி பதினொன்று.

[அரண்மனையின் முன் மண்டபம், ஓர் அணையிலே தாங்க முடியாத உடல் வேதனையோடு மாறன் அமர்ந்திருக்கின்றான். அவனுக்கு இடப்பக்கத்திலே ஓர் அழகிய பீடத்திலே ஹேமசந்திரர் அமர்ந்திருக்கின்றார். அவருக்குப் பக்கத்தில் மல்லிசேனரும், மற்றைக் குருமாரும் தத்தம் தகுதிக்கேற்ற ஆசனங்களிலே அமர்ந்திருக்கின்றனர். அரசனின் மெல்லணைக்கருகில் மானி, கண்ணீருங் கம்பலையுமாய் நிற்கிறாள். அவளுக்கருகில் தேன்மொழி, அல்லி, கயற்கண்ணி ஆகியோர் நிற்கின்றனர். சிறிது தூரத்தில் குலச்சிறையார் துன்பங் கவிந்த முகத்தோடு நிற்கிறார்]

ஹேம: மன்னா! எதற்கும் அஞ்சாதே: நீ தீயிலே குளிப்பது போலவும், பின்னர் எவ்வித ஊறுமின்றி, முன்னரிலும் பொலிவோடு வெளியே வருவது போலவும் சென்ற இரவு கனவுகண்டேன். உனக்கு என்னவோ ஏதோ என்று சிந்தித்து இருக்கையில் ஏவலன் வந்து நடந்ததைச் சொன்னான்; கேட்டதும் ஓடோடிவந்தேன் நான் இருக்கையில் பயம் ஏன்? எல்லாம் சிறிது நேரத்தில் தீர்ந்துவிடும். (மயிற்பீலியால் அவன் உடலைத் தடவுகிறார்)

அருகனே சரணம்.
அசோகமர்ந்தவனே சரணம்.
நான்முகத் தேவே சரணம்,
மன்னன் பிணி தீர்க.
மாநிலம் சிறக்க,
அஸ்தி நாஸ்தி!
அஸ்தி நாஸ்தி!

[ஹேமச்சந்திரர் பிடித்திருந்த மயிற்பீலி அரசனின் உடல் வெப்பத்தால் தீய்ந்து கருகுகின்றது. அவர் அச்சத்தோடு மல்லிசேனரின் மயிற்பீலியைப் பெற்று அதனாலே அரசனது உடலைத் தடவுகிறார்]

**மாற:** (வேதனையால் நெளிந்தபடி) அடிகளே! உங்கள் மயிற்பீலி உடலிலே படப்பட என் வேதனை கூடுகின்றதேயன்றிச் சற்றும் குறைவதாய் இல்லை; ஆ... என்னால் தாங்கவே கூடவில்லை;

**மானி:** அரசே! இந்த வெப்புநோயைப் போக்க வல்லவர், ஆலவாய்த் திருமடத்திலே தங்கியுள்ள திருஞானசம்பந்தப் பெருமான் ஒருவரே. அவர் வருவாரானால் தங்கள் உடற்பிணியோடு, உயிர்ப்பிணியும் நீங்கிவிடும்; இது சத்தியம்;

**ஹேம:** (வஞ்சகச் சிரிப்புச் சிரித்து) ஓகோ! இப்போதுதான் புரிகிறது. மன்னவ! உள்வீட்டிலேயே உனக்குப் பகைவர் மலிந்துவிட்டனர். (மானியைச் சீற்றத்தோடு நோக்கி) அவர்களின் சூழ்ச்சிதான் உனது வெப்ப நோய்க்குக் காரணம்.

**மாற;** (வேதனையோடு அனுங்கியபடி) நீங்கள் என்ன சொல்கிறீர்கள் சுவாமி!

**ஹேம:** "நீ, சுதந்திரமாகச் சைவ வாழ்வு வாழ எவரை அனுமதித்தாயோ, அவர்கள் திருமறைக் காட்டிலிருந்து சைவச் சிறுவன் ஒருவனை அழைத்திருக்கின்றனர். அவனும் அவனைச் சேர்ந்த ஞானசூனியக் கூட்டமும் ஆலவாய் மடத்திலே தங்கியிருக்கின்றனர். அந்தச் சிறுவனைக்கொண்டு உன் மனத்தை மாற்றச் சூழ்ச்சி செய்கிறார், தேவி!

**மாற:** (எரிச்சலோடு) அதைத்தான் நேற்றே சொல்லிவிட்டீர்களே! ஏதோ மந்திரஞ் செய்து அவர் இருக்கும் இடத்தை எரியூட்டப்போவதாயும் சொன்னீர்கள்.

**மானி:** (காதைப் பொத்தியபடி) சிவ சிவ! எத்தகைய அபசாரம் செய்துவிட்டீர்கள்? அரசே! சம்பந்தப்பிள்ளை

யார் சாமானியரல்லர், தெய்வத்தன்மை பெற்ற செம்மல் அவர். அவரை அழிக்க நினைப்பவர்க்கே அழிவு உண்டாகும். அவரைப் பழிப்பது பெரும் பாவம்! பேரபசாரம்!

மல்லி: அபசாரம்...! அபசாரம்..! மன்னரே அவன் வந்ததற்கும், உமது வெப்பு நோய்க்கும் ஏதோ தொடர்பிருக்கவேண்டும். அதனை ஆராய்ந்து கண்டு பிடிப்பதே உமது நோய்தீரச் சிறந்த வழி.

மாற: (வெறுப்போடு) உங்கள் ஆராய்வு இருக்கட்டும். எனது நோயை முதலிற் போக்குங்கள். ஆ... ஐயோ! தாங்கக்கூடவில்லையே! மானி! எவ்வகையிலும் இந் நோய் நீங்கவேண்டும். நீ சொன்ன பிள்ளையாரை யாவது அழை.

ஹேம: மன்னா! நீ உன் உணர்வோடுதான் பேசுகிறாயா?

மல்: எங்கள் ஆற்றலில் உமக்கு நம்பிக்கையில்லையா?

மாற: அடிகளே! 'சம்பந்தப்பிள்ளையார்' என்று மானி கூறியவுடனேயே எனது நோய் குறைந்து உடலெங் கும் குளிர்ந்ததுபோன்றிருந்தது, இதன் காரணம் எனக்குத் தெரியவில்லை.

மல்லி: (கோபத்தோடு) மன்னரே! மாற்றாரின் மாயத் திலே மயங்காதீர். சாம்பர்பூசிக் கூவித்திரியும் பேதையா உமது பிணிபோக்கவல்லவன்?

மாற: (கோபத்தோடு) பேசாதீர். உங்கள் பேச்சுக் கேட்டுப் பட்ட துயர் போதும். குலச்சிறையாரே! போம். அந்தப் பாலகரைத் தக்கமரியாதைகளுடன் அழைத்துவாரும்.

குலச்: தங்கள் சித்தம் அரசே!

[சமண குருமார் மலைத்து நிற்கின்றனர். குலச்சிறை யார் போகிறார். அரசன் வேதனையில் முனகுகிறான். மானி அவனது நெற்றியில் துளிர்த்த வியர்வையைத் துடைத்து விடுகிறாள்.

திரை

## காட்சி பன்னிரண்டு

*[அரண்மனையின் முன்மண்டபம்; சமண குருமார் முன்போல அமர்ந்திருக்கின்றனர். மானி, மாறனின் தலைமாட்டுப் பக்கத்தில் தோழியருடன் நிற்கிருள். அரசனுக்கு வலப்பக்கத்தில் அவன் கைக்கெட்டிய தூரத்தில் ஒரு பொன் தவிசில் திருஞானசம்பந்தப் பெருமான் அமர்ந்திருக்கிருர். அவருக்கு அண்மையிலே சிவனடியார் கூட்டம்]*

**மல்லி:** 'சங்கரா சிவ' என்று தொந்தனுப் பாட்டுப் பாடும் ஒரு பண்டாரக் கூட்டம், அதற்குப் பால் மணம் மாருத பாலகன் ஒருவன் தலைவன், மெய் யெலாம் நீறு பூசிப் பித்தர் போல் விளங்கும் பிச்சைக்காக் கும்பல்! இதை அழைக்கப்பணித்தவரோ பாண்டி நாட்டின் மதிப்பிற்குரிய மாமன்னர், அழைத்து வந்தவரோ இந்நாட்டின் முதலமைச்சர்!

*[குருமார் கூட்டம், 'வெட்கம் வெட்கம்' என்று ஆரவாரிக்கின்றது. சம்பந்தப் பெருமான் முறுவலிக்கிருர்; மாறன் சமணரை வெறுப்போடு நோக்கி வேதனையோடு நெளிகிருன்]*

**குல:** (சீற்றத்தோடு) எது வெட்கம்? பால்மணம் மாருப் பச்சிளம் பாலகனுக்குப் பயந்துபோய், அவர் வீற்றிருந்த திருமடத்திற்குத் தீ மூட்டுவதா? அல்லது பதிதர் கூட்டத்தைத் துரும்பென மதித்துப் பரமன் புகழைப் பாடியவண்ணம், நாமார்க்கும் குடியல்லோம், நமனையஞ்சோம்' என்று அவர்கள் முன் கம்பீரமாகத் தலைநிமிர்ந்து வருவதா? எது வெட்கம்?

சீ! நீங்களும் மனிதர்களா? இப்படிச் செய்துவிட்டுத் தலைநிமிர்ந்து தருக்கியிருந்து வாய்போனவாறு பேச உங்களுக்கு வெட்கமாயில்லை?

மாற: (அதிர்ச்சியடைந்து) மந்திரியாரே நீர் சொல்வதென்ன?

குல: இந்தப் பிள்ளையாரும், அவர்தம் அடியார் கூட்டமும் தங்கியிருந்த மடத்தை எரிக்க மந்திரோச்சாடனம் செய்தார் மல்லிசேனர். மந்திரம் பலிக்கவில்லை. மகாதேவன் அருள்பெற்ற மாண்பினரைச் செந்நாத் தீ என் செய்யும்! வாய்த்தீ பொய்த்ததும் கையிலே கொள்ளி ஏந்தி, மடத்திற்குத் தீ வைத்தார் இந்த மகானுபாவர்!

மாறன்: (வெறுப்போடும், அருவருப்போடும்) அடிகளே!

குலச்; அவருக்கு வாய் ஏது? அவரைத் தூண்டிவிட்ட பெரியார் முறுவல் வாடாது மனிதகுல மாணிக்கம் போல் மாண்பொடு வீற்றிருக்கும் மகத்தான காட்சியைப் பாருங்கள்;

மாற: (வேதனையும் அதிர்ச்சியும் மிகுதியாக) ஸ்வாமி!

குலச்: வேந்தே! உங்களை வாட்டி வதைக்கின்ற வெப்பு நோய், மல்லிசேனர் வைத்திட்ட தீயேதான் என்பதை இப்போதாவது தெரிந்துகொள்ளுங்கள். குடிமக்கள் செய்தவினை கோவேந்தனைப் பற்றிடும் என்பது இன்று நிதர்சன உண்மையாகிவிட்டது;

[எல்லாரும் அதிர்ச்சியடைந்து பேசாதிருக்கின்றனர். அரசன் நோய்க் கொடுமையும், ஏமாற்றத் துன்பமும் தாங்காது முனகுகின்றான். மானி விம்மியபடி சம்பந்தப் பெருமானை நோக்குகின்றாள்]

மானி: பிள்ளைப் பெருமானே! என் நாதர்... என் நாதர்... என் உயிர்...

பிள்: சமணர் வைத்த தீ பையவே சென்று பாண்டியற்காயிற்று; அது பையவே நீங்கும். அஞ்சாதே;

**ஹேம:** ஓஹோ...சூழ்ச்சியின் மூலம் துரோகத்தின் பிறப் பிடம் எது என்று தெரிந்து விட்டது.

**மல்:** அடிகளே! எழுந்திருங்கள். அரசரும் மாறிவிட் டார். அரிச்சுவடியே படித்தறியாத இந்தச் சிறுவ னுக்கு எல்லாரும் ஆட்பட்டு விட்டனர்; எங்கள் அறிவொளி இந்த இருளிடத்தே பயனற்றுப்போய் விடும்; எமக்கு என்ன?

**ஹேம:** (முறுவலுடன்) பொறும்...வடமொழியும், தென் றமிழும் கரைகண்ட மகா சமுத்திரம் நான். பாடலி புரத்தில் பதினுறுண்டுகள் சமயமும் கலைகளும் முறை பெறக் கற்றுச் சகலகலா பண்டிதன் என விருதும் பெற்றிருக்கிறேன். சியத் வாதம் என்ற எமது தத் துவக் கருவூலத்தின் ஓர் எழுத்தைக்கூட இவனல் புரிந்துகொள்ள இயலுமா? பாலகனே என்னுடன் சமயவாதம் புரிய வருகின்ருயா?

**திருஞா:** கடவுளை நம்புவதொன்றே நான் கற்ற கல்வி; அவனருளைக் காண்பதொன்றே நான்பெற்ற ஞானம். ஏதுக்களாலும், எடுத்த மொழியாலும் மிக்குச் சோதி யாது, அவன் வழியிலே நம்பி நடத்தலே நான் அறிந்த உண்மை. இதற்கு மேல் யாதும் அறியேன்; அறியவும் விரும்பேன்.

**மல்:** குருடியைக் கண்ணழகி என்பதுபோல் உனக்கு ஞானசம்பந்தன் என்று பெயர் சூட்டினரே! அதைச் சொல்.

[சமணர்கூட்டம் கண்டபடி பேசிப் பேரிசைச்சல் உண்டாக்குகின்றது. மானி நடுநடுங்கிப் பயந்து திரு ஞானசம்பந்தரை நோக்குகிருள், சம்பந்தப்பெருமான் புன்முறுவலோடு அவளுக்கு அபயம் கொடுக்கிருர். பின் கரங்கூப்பி நின்று பாடத் தொடங்குகின்ருர். சமணர் கூட்டமும் அந்தத்தெய்வீகப் பேரிசை கேட்டு அடங்கிக் கிடக்கின்றது.]

திருஞா: பதிகம் பண்: கொல்லி

மானி னேர்விழி மாதராய் வழுதிக்கு
மாபெருந் தேவிகேள்
பானல் வாயொரு பாலன் ஈங்கிவன்
என்றுநீபரி வெய்திடேல்
ஆனை மாமலை ஆதியாய இ
டங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட் கெளியே னலேன்திரு
ஆலவாயரன் நிற்கவே.

[பாடல் முடிவுற்றதும் பழையபடி சமணர்களின் இரைச்சல் தொடங்குகின்றது. அரசன் வெறுப்போடும் வேதனையோடும் "நிறுத்துங்கள்" என்று கத்துகிறான்]

மாற: நிறுத்துங்கள்... (மூச்சு இழுக்கின்றது. வேதனையோடு முனகியபடி) வீண் வாதங்களாற் பயனில்லை. நான் ஒன்று சொல்கிறேன். அதன்படி செய்யுங்கள்.

சமண: நல்லது.

மாற: எனது நோயுற்ற உடலின் ஒரு பகுதியை நீங்கள் உங்கள் திறமையாலே பரிகரியுங்கள். மறுபகுதியை இவர் பரிகரிக்கட்டும். இப்போட்டியில் யார் வெற்றி பெறுகின்றனரோ, அவர்பக்கமே சேர்வேன்.

மல்: இது எங்கள் குருதேவருக்கு ஒரு சிறு விடயம். இவனால் முடியுமா? (சம்பந்தப்பெருமானை ஏளனத்தோடு பார்க்கின்றார்.)

சம்: சோமேசன் துணைநிற்பான். பார்ப்போம்.

மாற: தொடங்குங்கள்.

[பிள்ளையார் கைகூப்பித் தியானத்தில் ஆழ்கின்றார். ஹேமச்சந்திரர் குண்டிகையிலிருந்து நீர் எடுத்து மந்திரித்து மாறனின் இடப்பக்கத்தில் தெளிக்கின்றார். மாறன் வேதனையோடு நெளிகின்றான். பிள்ளையார் திருநீற்றுப் பதிகத்தைப் பாடி விபூதியை அவனது வலப்பக்கத்திலே பூசுகின்றார். தொடக்கத்தில் மாறன் விபூதியைக்கண்டு அருவருத்து முகஞ் சுழிக்கிறான். ஆனால் அது உடலிலே பட்டதும் வேதனை குறைந்ததால் முகம் சிறிது மலர்கின்றான்.]

சம் திருநீற்றுப் பதிகம் பண்: காந்தாரம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயன் திருநீறே.

[மாறனின் வலப்பக்கத்தில் வெப்புக் குறைவதை அவன் முகம் காட்டுகின்றது. அதே வேளையில் இடப்பக்கத்தில் நோய் கூடுவதை இடது கரம் துடிப்பதையும் இடது பக்கத்தை அவன் வலது கரத்தால் பற்றி முனகுவதையும் கொண்டு அறியமுடிகிறது.]

சம்: வேதத்திலுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திரு ஆலவாயன் திருநீறே.

சம். (கனிவோடும் முறுவலோடும்) எப்படி இருக்கிறது?

மாற: (வேதனையும் மகிழ்வும் மீதூர) ஸ்வாமி! எனது வலதுபக்கம் வைகையிலே குளித்ததுபோலக் குளிர்கின்றது. இடப்பக்கமோ வடவைக் கனலாகப் பற்றி எரிகின்றது. இது உண்மை.

ஜைன: (எரிந்து கருகும் மயிற்பீலியை நோக்கியபடி) எது உண்மை? மன்னு! பொய் உரையாதே. நோய் காரணமாக எந்தப்பக்கம் சுகமாயிற்று என்று தெரியாது கூறுகிறாய். (இரகசியமாக மாறனுக்கு மாத்திரம் கேட்கும்படியாக) சொல்; பொய்மையும் வாய்மை இடத்த; எங்கள் பங்கமே குளிர்ந்தது என்று சொல்,

மாற: (சீற்றத்தோடு) அடிகளே! என்னை என்ன நினைத்தீர்? கருகிவிழும் உமது மயிற்பீலி கூறும் உண்மையை நான் மறைக்கவேண்டும் என்கிறீரா? எழுந்திரும்; பிள்ளைப் பெருமானே! தேவரீரே எனக்குத் துணை; சாம்பராகிக்கொண்டிருக்கும் எனது இடப் பாரிசத்தையும் சுகமாக்குங்கள்;

[ஹேமச்சந்திரரும், மற்றைக் குருமாரும் எழுந்து நாணித் தலைகுனிந்து நிற்கின்றனர். சம்பந்தப் பெருமான் இடது புறம் சென்று மாறனின் இடதுபக்கலிலே திருநீற்றைப் பூசிப் பாடுகின்றார்.]

**சம்:** முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயன்திரு நீறே.

[மாறனின் இடதுபுறமும் முன்போல ஆகின்றது. அவன் சம்பந்தப்பெருமானின் பாதாரவிந்தங்களில் வீழ்கின்றான். மங்கையர்க்கரசியாகிய மானியும் சென்று கண்ணீர்வாரப் பிள்ளையாரின் பாதங்களில் வீழ்ந்து வணங்குகின்றாள். குலச்சிறையாரும், திருநீலகண்ட யாழ்ப்பாணனாரும் மற்றையோரும் 'அரஹர மகாதேவ' என்று முழங்குகின்றனர். சமணர் 'கேட்டுமுட்டு, கேட்டுமுட்டு' என்று கூறித் தம் செவிகளைப் பொத்துகின்றனர்.]

**மாற:** ஞானபோனகரே! பூம்புகலிப் புண்ணியரே! இன்றுவரை இருளடைந்து கிடந்த என் நெஞ்சமும் நெற்றியும் இன்றுதான் ஒளிபெற்றன. பழவினைப் பயனால் இந்தப் பாவிகட்கு வசமானேன். என்னை ஈடேற்றிவிட்டீர்கள். திருநீற்றின் மகிமையை இன்று தான் உணர்ந்தேன்; உய்ந்தேன்; உயர்ந்தேன்.

[ஹேமச் சந்திரரும், மற்றைச் சமண குருமாரும் நின்ற பக்கம் நோக்குகின்றான். கோபம் கிளர்ந்தெழுகின்றது]

**மாற:** இன்னும் ஏன் இங்கு நிற்கின்றீர்கள்? என் கண் முன்பு நில்லாது ஓடிப்போங்கள்.

**ஹேம:** (பழைய முறுவல்காட்டி) மன்ன! ஏதோ அற்பமான அற்புதம் ஒன்றைக் கண்டு நீ மயங்கிவிட்டாய். உண்மையின் பாதை இவ்வாறுதான் இடையிடையே இருள்மூடிக் கிடப்பது வழக்கம். அவ்வேளைகளில் அறிஞர் நிலையில் திரியாது மலைபோல் நிற்பர். மற்றவரோ காற்றிடைப்பட்ட துரும்பாய்க் காற்றுச் சென்ற வழியே சென்று அழிவர்.

மாற: (எரிச்சலோடு) நீங்கள் என்னதான் சொல்கிறீர்கள்?

ஹேம: இன்னும் இரண்டே இரண்டு வாய்ப்புக்கள் தா என்று கேட்கிறேன். இந்தப் பாலகன் அனல்வாதம் நடாத்தி எம்மை வெல்லட்டும். அதன்பிறகுதான் நாம் எமது தோல்வியை ஒப்புக்கொள்வோம்.

குல: (ஏளனத்தோடு) பிணிவாதம் முடிந்தது. இனி அனல்வாதம் போலும். அதிலுந்தோற்ருல் பின்பு புனல்வாதம்! அதன் பின்னர் பிடிவாதம்! அப்படித் தானே?

மல்: குலச்சிறையாரே! கொக்கரியாதீர்.

குலச்: (கோபத்தோடு வாளையுருவி) என்ன சொன்னீர்?

மாற: (கையசைத்து) வேண்டாம் குலச்சிறையாரே! பொறும். வாய்ப்பளிப்போம். அடிகளே! புனல்வாதம் என்றீர்களே? அதற்கான நிபந்தனையைச் சற்றுச் சொல்லுங்கள்.

ஹேம: எமது சமய தத்துவம் அடங்கிய ஓர் ஏட்டினை நான் எழுதி நெருப்பில் போடுவேன். அது எரியாது பழைய நிலையிலேயே இருக்க எடுத்துக் காட்டுவேன். அதுபோல இவனும் செய்து காட்டல்வேண்டும். முடியுமா? அவனைக் கேள்.

மாற: (பிள்ளையாரை நோக்கி) அடிகளாரே! 'ஆம்' என்றுரைப்பதா.

திருஞா: ஆலவாய் அரனின் அருள் அடியேன்பால் என்றும் உண்டு. அதை முன் வைத்து இவ்விரு வாதங்களிலும் கலந்துகொள்ள ஆயத்தம்.

குலச்: நல்லது. ஹேமச்சந்திரரே! மற்றைக் குருமார்களே! நீங்கள் இவ்வாதத்திலே தோற்ருல்...?

மல்: ஜினர் என்ற சொல்லின் பொருளே வென்றவர் என்பதுதான். நாம் தோற்பதே இல்லை. அவ்வாறு தோற்ருல் கழுமரம் ஏறவும் ஆயத்தம்.

மாற: கழுமரம் ஏறவும் என்பது என்ன? யாவரும் ஏறுவோம் என்று சொல்லுங்கள் சம்மதந்தானே?

குருமார் யாவரும்: சம்மதம், சம்மதம், சம்மதம்!

குலச்: தெய்வ சித்தம் உங்கள் நாவிலே வந்து அமர்ந்து விட்டது. அவன் வகுத்த விதியை அழிக்க வல்லார் யார்?

மாற: சரி, இவ் வாதத்தை வைகைக் கரையிலேயே நடாத்துவோம். உம் நடவுங்கள்.

[பெண்கள் தவிர்ந்த மற்ற யாவரும் போகிறார்கள்]

திரை

## காட்சி பதின்மூன்று

[ஆலவாய்நகரத்து வீதி. புலவர் மேதாவியார் திருநீறு தரித்து, உருத்திராக்கம் பூண்டு சிவப்பழமாய் வருகின்றார். வீதியிலே செல்பவர்களின் மேனியெங்கும் சிவசின்னங்கள் பொலிவது கண்டு அவருக்கு எல்லையற்ற மகிழ்ச்சி ஏற்படுகின்றது ]

**மேதா:** எல்லாம் சொக்கேசன் திருவருள். நேற்று இந்த நகர வீதியிலே ஒருவன்கூடத் திருநீறு தரித்துச் சென்றதில்லை. இன்று... எல்லாம் தலைகீழாக மாறி விட்டது. 'அரசன் எவ்வழி, குடிகளும் அவ்வழி' என்று தெரியாமலா சொல்கிறார்கள்? அரசன் சைவ ஞானி. மக்களும் சைவராகிவிட்டார்கள். ஏன் நானுங்கூடத்தான் நேற்றுவரை வெளிப்பார்வைக்கு நான் ஒரு சமணனாகத்தானே இருந்தேன்?

[இவ்வேளையில் சிவனடியார் கூட்டம் ஒன்று வீதிவழியாகப் பாடியவண்ணம் போகின்றது.]

**சிவனடி:** பதிகம் பண்: கௌசிகம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரியர் ஏறுகந் தேறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்
பெரியர் ஆரறி வாரவர் பெற்றியே.

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தி யாதெழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ?

[சிவனடியார் நடந்து செல்கிருர்கள்: அவர்கள் சென்ற திசையை நோக்கி மேதாவியார் கைகூப்பி நிற்கின்ருர். விழிகளில் நீர் வழிகின்றது.]

மேதா: 'போகமார்த்த பூண்முலையாள்' என்ற பதிக ஏட்டினை வைகையில் இட்டபோது அது எதிரேறிச் சென்றது அற்புதமோ? 'வாழ்க அந்தணர் எனத் தொடங்கும் திருப்பாடல் எழுதிய ஏட்டை நெருப்பிலிட அது முன்னரிலும் பசுமையாக வெளிப்பட்டது அற்புதமோ? அதன்கண் 'வேந்தனும் ஓங்குக' என வருமிடத்தை அவர் பாடியபோது கூன் பாண்டியன் கூன் நிமிர்ந்து நின்றசீர் நெடுமாறன் ஆனது அற்புதமோ? ஆஹா! பாலருவாயரின் அற்புதங்களில் எதை மற்றதில் உயர்ந்ததென்பது? எல்லாம் ஈடிணையற்ற அற்புதங்கள்தாம்.

சமணப் பாவிகள் தொலைந்தார்கள். இப்பொழுது அவர்களின் உயிர்கள் கழுமரங்களில்துடித்துக்கொண்டிருக்கும். எல்லாம் எனையாளும் ஈசன்செயல்'

[நடக்கிருர், அவ்வேளையில் குலச்சிறையார் வருகின்ருர்.]

குல: வணக்கம், மேதாவியாரே! ஏது சிவப்பழமாகக் காட்சி தருகிறீரே! 'பீலியும், தடுக்கும், குண்டிகையும் ஏந்தி 'அருகனே சரணம்' என்று ஜபிக்கவேண்டியவரல்லவோ நீர்?

மேதா: (வெட்கத்தோடு) உங்கள் அங்கதப்பேச்சால் என்னைக் குத்தாதீர்கள். ஏடு தூக்கும் புலவன் நான்; கொல்அயில் வேலேந்தும் குலச்சிறையாய் இருந்திருந்தால் என்றும் நான் சிவப்பழமாகவே இருந்திருப்பேன். (பெருமூச்சுவிட்டு) என்ன செய்வது? அதுசரி. தாங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்?

குலச்: புறங்காட்டிலே சமண குருமார் கழுவேறும் காட்சியைப் பார்த்து வருகின்றேன். நம்மைப் பிடித்த சனிகள் ஒருவாறு தொலைந்தன.

மேதா. சம்பந்தப்பெருமான் கருணையே வடிவானவராயிற்றே? அவர் இதற்கு எவ்விதம் ஒப்புதல் அளித்தார்? ஒருவர் இருவரா? எண்ணுயிரவர். இத்தனை உயிர்களும் போவதில் அவருக்கு மகிழ்வா?

குல: உண்மையில் சமணர் கழுவேறுவதுபற்றி அதிகம் வருந்துவது ஆளுடைய பிள்ளையார்தாட். ஆயினும் சைவர் இருந்து வாழ்மடத்திற்குத் தகவிலாச் சமணர் தீவைத்த மாபாதகத்திறகு இந்தத்தண்டனை ஏற்றதே, என்று அவர் மனந்தேறியிருக்கிறார்.

அன்றியும் சமணர்கள் தம் இறுதி வேளையிலாவது மனிதராக நடந்துகொண்டனர். தாமே முன்வந்து கழுவில் ஏறி எனது வேலையை எளிதாக்கிவிட்டனர்.

மேதா: வியப்பாக இருக்கிறதே! அவர்கள் அழுது குளறி ஆர்ப்பாட்டஞ் செய்திருப்பார்கள் என்றல்லவா நினைத்தேன்.

மேதா: (சிரித்தபடி) சிலர் அப்படியுஞ் செய்தார்கள். அந்த மகாகர்வி மல்லிசேனர் கூடக் கடைசி நேரத்தில் கண்கலங்கிவிட்டார். ஹேமச்சந்திரரின் புன்முறுவல்தான் கடைசிவரை மாறவில்லை.

மேதா: அந்த முறுவல் என்ற திரைக்குப்பின்னால்...அப்பப்பா! வேண்டாம். இந்த மகிழ்ச்சி வேளையில் அந்தக்கொடியவனை நினைக்கவேண்டாம். அதிருக்கட்டும். அரசரின் மனநிலை எவ்வாறிருக்கிறது? அவர் இப்போது ......

குலச்: எந்நேரமும் சிவநாம செபந்தான். விபூதியிலே குளித்தெழுகின்றார் வேந்தர். அது மட்டுமோ? மாணிக்கம், வைர வைடூரியங்கள் அலங்கரித்த மார்பில் உருத்திராக்க மாலைகள் மாண்புறப் பொலிகின்றன.

மேதா: கேட்க எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது? இத்தனை மாற்றங்களுக்கும் அடிப்படைக் காரணர் தாங்கள்தாமே. தங்களை எவ்வளவு பாராட்டினும் தகும்.

குல: அபசாரம்! அபசாரம்! அப்படிச் சொல்லாதீர்! மங்கையர்க்கரசியாரின் மாபெருந்தவமே இம்மாற்றத்தின் அடிப்படைக் காரணம்.

மேதா: உண்மை... மக்களாகிய தாமரைக் கொடியிடத்தே தனித்ததொரு தாமரை மலராய் அவர் விளங்குகின்றார்.

குல: (புன்னகைத்து) அவரைத் தாமரை மலர் என்று உவமிக்கக் காரணம்?

மேதா: தாமரை சேற்றிலே முளைத்தெழுகிறது. அதன் வேர் சேற்றிலே அழுந்திக் கிடக்கக் கொடிகளும், இலைகளும் தண்ணீரிலே மிதக்கின்றன. ஆனால் தாமரை மலரோ சூரியனை நோக்கி வளர்ந்து தண்ணீரையும் கடந்து நிற்கிறது; அதுபோல..

குல: அதுபோல... ?

மேதா: மும்மலச் சேற்றிலே முளைகொண்டு பிறவியாகிய தண்ணீரிலே நாமெல்லாம் மிதந்துகொண்டிருக்கிறோம். ஆனால் மங்கையர்க்கரசியாரோ பிறவித் தடத்தைக் கடந்து திருவருளாகிய கதிரொளியைக் காதலித்து மலர்ந்து நிற்கிறார், அதனாலேதான் அவரைத் தாமரை மலர் என்றேன். தப்பா?

குலச்: நீங்கள் புலவர்... பெயரோ மேதாவியார். புலமையும். மேதா விலாசமும் பிழைபோவதுண்டா?

[ஆலய மணி கேட்கின்றது]

சரி, சரி! நான் வீடு சென்று குளித்துவிட்டுக் கோயிலுக்கு வரவேண்டும் நீண்ட நாட்களுக்குப் பிறகு இன்றுதான் மன்னர் கோயிலில் அடிவைக்கின்றார். அதிலும் விசேடம் என்னவென்றால் ..

மேதா: (ஆவலோடு) சொல்லுங்கள். சொல்லுங்கள்

குலச்: சம்பந்தப்பெருமான் மன்னரையும், மங்கையர்க்கரசியாரையும் வாழ்த்தி விடைபெறப் போகின்றார்.

மேதா: அடடே! இவ்வளவு விரைவாகப் பிள்ளையார் எம்மை நீங்கிச் செல்வதா?

குலச்: அதற்கு என்ன செய்வது' பிள்ளையாரை ஓர் இடத்தில் தடுத்து நிறுத்துவது இயலாத காரியம். தமிழகத் தலங்களெல்லாம் செல்லவேண்டியவர் அவர். அங்கெல்லாம் சைவப்பெருமக்கள் அவர் வருகைக்காக, அவரது சைவத் தமிழிசைக்காக வான் நோக்கும் பயிராய்க் காத்திருக்கிறார்கள்.

சரி. நான் வரட்டுமா?

மேதா: வாருங்கள். நானும் வீடுசென்று திரும்பிக் கோயில் வருகிறேன். அங்கு, ஞானபோனகரைக் கடைசித்தடவையாக எனது கண்குளிரக் காணவேண்டும்.

(இருவரும் பிரிந்து செல்கின்றனர்)

திரை

## காட்சி பதினான்கு

[ஆலவாய்க் கோயிலின் சந்நிதி, முதலாங் காட்சியிற் கண்டது போலத் தீபமங்கல ஜோதியில் சோமசுந்தரரும், அங்கயற்கண்ணியும் மூழ்கி விளங்குகின்றனர். திரை விலகும்போது அருச்சகர் பஞ்சாராத்தி காட்டுகின்றார். அரகர என்ற கோஷம் வான்முட்ட எழுகின்றது. நாதசுரத்தில் நாட்டை ராகம் மிகக் கம்பீரமாய் வாசிக்கப்படுகின்றது.

தீபாரத்தி முடிந்ததும் அருச்சகர் விபூதி பிரசாதம் வழங்கத் திருஞானசம்பந்தப் பெருமான் உட்பட யாவரும் பெற்று அணிகின்றனர். பிரசாத விநியோகம் முடிந்ததும் மங்கையர்க்கரசியாரும், நின்றசீர் நெடுமாறனும் பிள்ளையாரின் திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்குகின்றனர். பிள்ளையார் அவர்கள் இருவரையும் ஆதரவோடு எடுத்து, நெற்றியில் விபூதி தரித்துவிடுகின்றார்]

மாற: ஆளுடைய அப்பனே! பரம கருணாநிதியே! சமணர் வசப்பட்டிருந்த என்னை மனம் மாற்றுவதற்கு மங்கையர்க்கரசி பட்ட பாடுகள் கொஞ்சமல்ல. "அரசே! நீங்கள் சென்ற வழி பரிசுத்தமானது. செல்லும் வழியோ இருள் நிறைந்தது. தயைகூர்ந்து மீண்டும் பழைய வழிக்கே திரும்புங்கள்" என்று மன்றாடினாள். நான் திரும்பவில்லை. அதன் பயனை அனுபவித்து விட்டேன்.

சம்: (முறுவலுடன், வேந்தே! நீ செய்த நல்வினைகளிலெல்லாம் மிகப்பெரிய நல்வினை எது தெரியுமா? மங்கையர்க்கரசியை மனைவியாய் அடைந்ததுதான். அவள் தெய்வப் பாவை.

[மங்கையர்க்கரசி நாணமும் கூச்சமும் மீதூரத் தலை குனிகிருள்.]

நீங்கள் இருவீரும் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து சைவம் வளர்ப்பீர்களாக. நாம் சென்று வருகின்ருேம்.

[திருஞானசம்பந்தப் பெருமான் கடைசித் தடவையாக ஆலவாய்க் கடவுளை வணங்கி வெளியே நடக்கின்ருர். திருநீலகண்ட யாழ்ப்பாணரும், திருமறைக்காட்டிலிருந்து அவரோடு வந்த அடியார்களும் அவரைத்தொடர்கின்றனர். மங்கையர்க்கரசியாரும், மாறனும், குலச்சிறையாரும் பிறரும் உச்சிமேற் கூப்பிய கரத்தராய் அவர் செல்லும் திசையையே நோக்கி நிற்கின்றனர். பின்னணியிலே வாத்தியக் கருவிகள் 'பூசுவதும் வெண்ணீறு' என்ற பதிகத்திற்குரிய பண்ணிசையை இசைக்கின்றன]

திரை

**மங்கையர்க்கரசியார்**

பூசல் அயிற் றென்னனுர்க்கு அனலாகப் பொருமையினல்
வாச மலர்க்குழற் பாண்டிமா தேவியாம் மானி கண்டீர்
தேசம் விளங்கத் தமிழா கரர்க்கறி வித்தவரால்
நாசம் விளைத்தாள் அருகந் தருக்குந்தென் னுட்டகத்தே.

(நம்பியாண்டார் நம்பி-திருத்தொண்டர் - திருவந்தாதி)

● நான் இந்த நாடகத்தைப் படித்துப் பார்த்தேன். படிக்கப் படிக்கச் சுவை மிகுந்தது; அலுப்புக் கடுகளவும் தட்டவில்லை. நாடக பாத்திரங்கள் திறம்படச் சித்திரிக்கப்பட்டுள்ளன. நாடகாசிரியர் எளிய செந்தமிழ் நடையைக் கையாண்டிருக்கிறார். எவரும் எளிதிற் படித்துப் பயனடையலாம்,

● தெய்வத் தமிழிற்கும், சித்தாந்த சைவத்திற்கும் இந்த நாடகம் பெருந் தொண்டு செய்யும்.

● இந்த நாடகத்தில் நெஞ்சை நீராய் உருக்கும் கட்டங்களும், பத்திநெறியைப் பெருக்கும் காட்சிகளும் பல உண்டு.

— முதலியார் செ. முத்துத்தம்பி

அனந்தா அச்சகம்,
யாழ்ப்பாணம்.